# ஆனை கட்டிய அரியாத்தை



அகளங்கன்

# ஆனை கட்டிய அரியாத்தை

# ஆனை கட்டிய அரியாத்தை

(நாடகம்)

## அகளங்கன்


வெளியீடு:
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் -38

# ஆனை கட்டிய அரியாத்தை
(நாடகம்)


பெயர் :- ஆனை கட்டிய அரியாத்தை
வகை :- நாடகம்
எழுதியவர் :- **அகளங்கன்** (நா. தர்மராஜா)
முகவரி :- 90, திருநாவற்குளம், வவுனியா.
பதிப்புரிமை :- திருமதி பூரணேஸ்வரி தர்மராஜா B.A (Hons)
வெளியீடு :- வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்.
முதற்பதிப்பு :- 21 -05- 2017
அட்டை :- ச.தர்ஷன்
அச்சுப்பதிப்பு :- வாணி கணனிப் பதிப்பகம்.
இல 85, கந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா
024 - 2223658
விலை :- ரூபா 100/=

Name :- Aanai Kaddiya Ariyaaththai
Type :- Drama
Author :- **Agalangan** (N.Tharmarajah)
Address :- 90, Thirunavatkulam, Vavuniya
Copy Rights :- Mrs.Pooraneswary Tharmarajah.B.A (Hons)
Publication :- Circle Of Arts And Literary Friends.
Vavuniya.
First Edition :- 21 - 05 - 2017
Cover :- S.Tharshan
Printers :- Vaani Computer Printing Centre
No 85, Kanthasamy Kovil Road
Vavuniya. 024 2223658
Price :- Rs. 100/=

Email :- Akalankan04@Gmail.com
ISBN :- 978-955-7654-14-0



உலகின் கடைசித் தமிழ் இராச்சியமான

வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னனான

**மாவீரன் பண்டாரவன்னியனின்**

வீரவரலாற்றை நாடகம் மூலமாக

உலகிற்குத் தெரியப்படுத்திய

**கலாபூஷணம், தமிழ்மணி, கலாநிதி, சாகித்திய இரத்தினா**

# முல்லைமணி

**(வே.சுப்பிரமணியம்)**

அவர்களுக்கு

இந்நூல்

# காணிக்கை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வெளியீட்டுரை | 07 |
| 2. | வாழ்த்துப்பா - சி.ஏ.இராமஸ்வாமி | 09 |
| 3. | முன்னுரை | 11 |
| 4. | ஆனை கட்டிய அரியாத்தை - நாடகம் | 15 |
| 5. | வேலப்பணிக்கர் ஒப்பாரி | 46 |
| 6. | ஆனைகட்டிய அரியாத்தை - கதை | 65 |
| 7. | அகளங்கன் நூல்கள் | 71 |
| 8. | தமிழ் வாழ்த்து | 73 |

# வெளியீட்டுரை

## கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்,

செயலாளர், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்,
(சிரேஷ்ட விரிவுரையாளர் ஆங்கில மொழிக்கற்பித்தல் மையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 38வது நூலாக வெளிவரும் **தமிழ்மணி அகளங்கனின் "ஆனைகட்டிய அரியாத்தை"** வன்னி மண்ணின் பெருமைகளைப் பேசும் பல இலக்கியப் பாத்திரங்களில் ஒன்றாகத் திகழும் வன்னி மாதரசி அரியாத்தையின் வரலாற்றைக் கூறும் இலக்கியம் ஆகும்.

மெற்றாஸ் மயில் அவர்கள் தொகுத்த வன்னி வள நாட்டுப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அரியாத்தையின் சாதனைகளை அரியான்பொய்கை 'வேழம் படுத்த வீராங்கனை' என நாட்டுக் கூத்தாக எழுத, மெற்றாஸ் மயில் அவர்களே அதனை அரங்கேற்றிய வரலாற்றைக் கொண்ட பூமி இது.

வன்னிப் பெண்மணியின் வீரத்தையும் பதிபக்தியையும் பறைசாற்றும் பண்பை 'குமாரபுரம்' நாவலில் பாலமனோகரனும், 'மதயானையை வென்ற மாதரசி' எனும் சிறுகதையாக குமுழமருதனும் 'வேழம் படுத்த வீராங்கனை' எனும் நாட்டுக்கூத்தாக அருணா செல்லத்துரை அவர்களும் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளமையை தமிழ்மணி அகளங்கன் உசாத்துணையாகக் கொண்டுள்ளமையும் அங்கீகரித்துள்ளமையும் கல்விப் பண்பாட்டை வலுப்படுத்துகிறது.

தனது **வானொலி நாடகமான** "ஆனைகட்டிய அரியாத்தை" பிரதியை மேடை நாடகமாக மாற்றி எதிர்கால கலைஞர்கள் பயன்படுத்த வசதியாக தனிநூலாக ஆக்கியுள்ளார் ஆசிரியர்.

இதனை வெளியிடுவதில் எமது வட்டத்தினர் தெரிவித்த விருப்புக்கு இணங்க இக் கைங்கரியத்தை செயற்படுத்துவதில்

ஒத்துழைப்பு வழங்கும் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்கு நன்றிகள்.

இதனை அழகுற வெளியிடும் வாணி கணினிப் பதிப்பகத்தாருக்கும் வெளியீட்டு முயற்சியில் ஒத்துழைக்கும் வட்ட அங்கத்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

பல்வேறு கலை இலக்கிய செயற்பாடுகளை 1997 பெப்ருவரி முழுநிலா காலந்தொட்டு இன்று வரை தொடரும் எமது வட்டம் ஏற்கனவே 198 கருத்தமர்வுகளையும் மாருதம் இதழில் 16 வெளியீடுகளையும் கண்டுள்ளது என்பதை பெருமையுடன் பதிவு செய்யவிழைகின்றோம்.

மக்கள் மத்தியில் கலை இலக்கிய தெளிவூடாக வாழ்வு பற்றிய எண்ணக்கருவை புடம் போடுவது வட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

நன்றி

**கந்தையா ஸ்ரீகணேசன்**
செயலாளர்,

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்
19.03.2017.

சிவநெறிப்புரவலர், சமூக சஞ்சீவி, தமிழியல் வித்தகர்

**சி.ஏ.இராமஸ்வாமி** அவர்களின்

## வாழ்த்துப்பா

**என்றென்றும் வாழ்க!**

நால்திசை அறிந்த ஒருவரென
நாடகம் காந்தியைத் தந்ததுவே
சாலவும் சிறந்த சரித்திரமாம்
சந்திர மதிஅரிச் சந்திரன்கதை
காலமும் வந்தது அவர்காண
காத்திடு வேன்சத்தியம் என்றறைந்தார்
ஏலவே அறிந்திட்ட உண்மையன்றோ
எங்கள் மக்களின் நாடகங்கள்

காட்சியைக் கண்டிடும் போதுகண்கள்
கலங்கிடு மாறங்கு அமைவதுண்டு
ஆட்சியைச் செய்திடும் உணர்வுஅப்போது
அறிவுக்கு இடமென்ப தில்லையங்கு
தீட்சண்யம் மிக்க அறிஞரிவர்
தீட்டிய பலவகை நாடகங்கள்
ஈட்டிடும் புகழுடன் நன்மையுமாம்
இன்னமும் தரவேண்டும் **அகளங்கன்**

நாட்டினில் நாடகம் கூத்துக்களால்
நம்மின முன்னோர் திறன்அறிந்தோம்
பாட்டொடு பாத்திரம் இணைகையிலே
பக்குவ மானதோர் காட்சிதரும்
ஏட்டிலே இல்லாச் சுவையதனை
இதயத்துள் புகுத்திடக் கூடுவதாம்
பாட்டிலே வல்லவன் பாரதிபோல்
பாடிட வல்லவர் **அகளங்கனாம்**

பலமணி நேரம் பேசவல்ல
பல்துறை அறிவு கொண்டவராம்
அலகிலா அறிவின் ஆற்றல்கண்டு
அயர்ந்துபோய் இருந்தவர் பலருமுண்டு
இலகுவில் மறக்கவே முடியாத
இனியபல் உரைகள் தந்தவராம்
கலகலப் பாகவே யாருடனும்
கலந்துரை யாடிடும் பண்புடையார்

அருமைத் தமிழ்மணி அகளங்கன்
**அகவை அறுபத்து மூன்று**கண்டார்
பெருமைக்கு உரியவர் நாமிவரைப்
பேறெலாம் பெற்று வாழ்கவென்போம்
**தரும ராசா** இவர்பெயராம்
**தமிழ்மணி** எனவே புகழ்பெற்றார்
இரும்புகழ் ஈட்டிய **கலாநிதி**யாம்
இதயத்தைக் கவர்ந்திட்ட என்குருவாம்

வவுனியா விலேதமிழ் வளர்வதற்கு
வழிகாட்டி யாமிவர் வாழ்கவென்போம்
கவனியா திருந்தபல் கலைஞர்களின்
**கலங்கரை விளக்கம்** வாழ்கவென்போம்
தவமுனி யாமிவர் என்றுரைக்கும்
தகைமையும் உள்ளவர் வாழ்கவென்போம்
எவருக்கும் இனியவ ரானஇவர்
என்றென்றும் வாழ்க வாழ்கவென்போம்

# முன்னுரை

"ஆனை கட்டிய அரியாத்தை" என்ற இந்த நாடகத்தின் கதை அமரர் செ.மெற்றாஸ் மயில் தொகுத்து வெளியிட்ட **"வன்னிவள நாட்டுப் பாடல்கள்"** நூலில் **"வேலப் பணிக்கர் ஒப்பாரி"** என்ற பகுதியில் உள்ளது.

கணவனோடு "உடன் கட்டை" ஏறிய கற்பரசிகளைத்தான் சரித்திரத்திலும், காவியங்களிலும், புராண, இதிகாசங்களிலும், சிற்றிலக்கியங்கள், பிரபந்தங்களிலும் பார்த்திருக்கிறோம்.

ஆனால் தனது மனைவியின் இறந்த உடலை எரிக்கின்ற சிதையில் பாய்ந்து "உடன் கட்டை" ஏறி தன் உயிரை மாய்த்துக் கொண்ட ஒரு கணவனை எந்தச் சரித்திரமும் சொல்லவில்லை. எந்தக் காவியமும், எந்தப் புராண இதிகாசங்களும், எந்தச் சிற்றிலக்கிய, பிரபந்தங்களும் சொல்லவில்லை. செவிவழிக் கதையாகவும் கேட்கவில்லை.

வன்னியில் நடைபெற்ற இந்த அதிசயக் கதைதான் இந்த நாடகத்தின் கதையாக அமைந்துள்ளது. இந்தக் கதையை நாட்டார் பாடல்களில் இருந்து எடுத்து **"குமாரபுரம்"** என்ற தனது நாவலில் திரு. அ. பாலமனோகரன் (நிலக்கிளி நாவலாசிரியர்) அழகாகச் சொல்லியிருந்தார்.

பின்னர் குமுழ மருதன் (திரு.சி.தெய்வேந்திரம்பிள்ளை) **"மதயானையை வென்ற மாதரசி"** என்ற பெயரில் இக்கதையைச் சிறுகதையாக்கினார்.

நாட்டார்பாடலின் அடிப்படையில் அமரர் தமிழ்மணி, கலாபூஷணம் அரியான் பொய்கை (திரு.கை.செல்லத்துரை) எழுதியதாகச் சொல்லப்பட்ட **"வேழம் படுத்த வீராங்கனை"** என்ற நாட்டுக் கூத்தின் அடிப்படையில் திரு.அருணா செல்லத்துரை வவுனியாவில் மேடையேற்றிய **"வேழம் படுத்த வீராங்கனை"** நாட்டுக் கூத்தையும், அவர் வெளியிட்ட இதன் ஒளி நாடாவையும் பார்க்கும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன.

இந்தக் கதையை **"ஆனை கட்டிய அரியாத்தை"** என்ற பெயரில் **வானொலி நாடகமாக** எழுதினேன். பல தடங்கல்களுக்குப் பின் இந் நாடகம் முழுமையாக இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

இலங்கையிலும், உலகின் பல பாகங்களிலும் பல தடவைகள் ஒலி பரப்பப் பட்ட இந்த வானொலி நாடகத்தைத் தயாரித்து ஒலிபரப்பிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தாருக்கு எனது நன்றி.

இவ் வானொலி நாடகத்தில் **திரு.அருணா செல்லத்துரை** அவர்கள் வேலப்பணிக்கராக நடித்துச் சிறப்புச் சேர்த்தார். அவருக்கும் என் நன்றி.

அரியான் பொய்கையின் "வேழம் படுத்த வீராங்கனை" நாட்டுக் கூத்தை இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றி பிரபலப் படுத்தியவர் அமரர் செ.மெற்றாஸ் மயில். அவருக்கும் என் நன்றி.

காலத்தின் தேவை அறிந்து **"ஆனை கட்டிய அரியாத்தை"** வானொலி நாடகத்தை **மேடை நாடக** வடிவிற்கு மாற்றி நூலாக்கியுள்ளேன்.

திரு.அருணாசெல்லத்துரை அவர்களின் வேண்டுகோளின்படி வேலப்பணிக்கர் ஒப்பாரியையும் சேர்த்துள்ளேன்.

குறும்படமாகவும் தயாரிக்கக் கூடிய வகையில் குறிப்புக்களையும் எழுதியுள்ளேன். கதையையும் நாட்டார் பாடலின் அடிப்படையில் எழுதியுள்ளேன்.

வன்னி மண்ணின் வீரத்தைப் பறைசாற்றும் பண்டார வன்னியனின் வீர வரலாறுபோல, வன்னி மண்ணின் பண்பாட்டைப் பறைசாற்றும் அரியாத்தை, வேலப்பணிக்கர், வரலாறும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கற்பரசியான அரியாத்தையையும், மனைவியின் இழப்பைத் தாங்கமுடியாது உடன் கட்டை ஏறிய வேலப்பணிக்கரையும் முக்கிய

கதா பாத்திரங்களாகக் கொண்ட இந் நாடகம் வன்னித் தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் என்று நம்புகிறேன்.

கற்பரசி கண்ணகியை வழிபடும் வன்னித் தமிழ்ப் பெண்களும் கற்பரசிகளே என்பதை "ஆனை கட்டிய அரியாத்தை" வெளிப்படுத்துகிறாள்.

வன்னியின் பெருமைக் கோபுரத்திற்கு இச்சிறு நூலும் ஒரு சிறுகல்லாக இருந்து துணை செய்யும் என்ற நம்பிக்கையில் இதனை வெளியிடுகிறேன்.

இந்நூலை வெளியிடும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினர்க்கும், குறிப்பாக செயலாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களுக்கும், இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த வாணி கணினிப் பதிப்பகத்தாருக்கும்,

இந்நூலை வெளியிடுவதிலும் வழமைபோல எனக்கு உதவிய என் தம்பியும் **"உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவை"**யின் ஸ்தாபகரும், தலைவருமாகிய திரு.க.குமாரகுலசிங்கம் (சிங்கம்) அவர்களுக்கும்,

சகல வகைகளிலும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கி ஒப்புநோக்கி உதவிய என் மனைவிக்கும், என் நன்றி.

எனது ஏனைய நூல்களைப்போல இந்நூலையும் கலைஞர்கள், இரசிகர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்போடு வேண்டுகின்றேன்.

இந்நாடகத்தை மேடையில் நடிக்கப் போகும் கலைஞர்களுக்கும், தயாரிப்பாளர்கள், நெறியாளர்களுக்கும், குறும்படமாகத் தயாரிக்கப் போபவர்களுக்கும் எனது நன்றி.

இந் நாடகத்தை மேடையேற்றுபவர்கள், குறும்படமாகத் தயாரிப்பவர்கள், எனக்குத் தெரியப் படுத்தினால் மகிழ்வேன்.

நன்றி

**அகளங்கன்**

தமிழ் அதர்
90, திருநாவற்குளம்,
வவுனியா.

# ஆனை கட்டிய அரியாத்தை

(நாடகம்)

**"வேலப் பணிக்கர் ஒப்பாரி"**
என்ற நாட்டார் ஒப்பாரிப்பாடலில் சொல்லப்பட்ட கதையை முழு ஆதாரமாகக் கொண்டு இந்நாடகம் அமைக்கப்பட்டது.

# ஆனை கட்டிய அரியாத்தை

(நாடகம்)

பாத்திரங்கள் :-

- சின்ன வன்னியன் (அரசன்)
- வன்னிச்சி (அரசி)
- அமைச்சர்
- பாலப் பணிக்கன்
- வேலப் பணிக்கர்
- அரியாத்தை
- நீலப்பணிக்கன்
- மற்றும் சிலர்

---

## காட்சி - 1

இடம் :- அரண்மனை

பாத்திரங்கள் :- சின்ன வன்னியன் (அரசன்), அமைச்சர். (அரசன் நிற்கிறான். அமைச்சர் வருகிறார்)

அமைச்சர் :- வீர தீரப் பராக்கிரமச் செயல்களிலே மேம்பட்டு வெற்றிகள் பல பெற்றவரும், அடங்காப்பற்று என்னும் வன்னி மண்ணின் காவலரும், வன்னியர் பரம்பரையின் வீரத் திலகமெனப் போற்றப்படுபவருமான சின்ன வன்னியனார் சேவடிகளுக்கு என் சிரந்தாழ்ந்த வணக்கங்கள்.

சின்ன வன்னியன் :- வாருங்கள் அமைச்சரே! வாருங்கள்!

அமைச்சர் :- நன்றி அரசே! தாங்கள் அவசரமாக அழைத்ததாகச் செய்தி வந்தது.

சின்ன வன்னியன் :- ஆம்....... ஆம் அமைச்சரே. எமது குமுழமுனையை இராசதானியாகக் கொண்ட வன்னி இராச்சியத்தைக் குறையேதுமின்றி அரசாளும் கடமை எனக்குண்டு. அல்லவா!

அமைச்சர் :- ஆம்....... அதிலென்ன சந்தேகம்.

சின்ன வன்னியன் :- மன்னனானவன் தன் மக்களைக் காக்கும் கடமை பூண்டவன் அல்லவா!

அமைச்சர் :- ஆம்...... அரசே, அதற்கென்ன குறை இப்போது வந்தது. வற்றாப்பளைக் கண்ணகை அம்மனும், புதூர் நாக தம்பிரானும், சடவங்குளம் ஐயனாரும் துணையிருக்க, ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் அருள் பாலிக்க தங்கள் இராச்சியத்தில் மக்களுக்கு என்ன குறை இருக்கிறது.

சின்ன வன்னியன் :- அமைச்சரே!....... மக்கள் நலனுக்காக முக்கியமான காரியம் ஒன்றை உடனடியாகவே ஆற்ற வேண்டியிருக்கிறது.

அமைச்சர் :- ஆணையிடுங்கள் அரசே! ஆகாயத்துச் சந்திரன் வேண்டுமா? அலை கடலின் அமுதம் வேண்டுமா: அட்டதிக்கு யானைகள் வேண்டுமா அல்லது.......

சின்ன வன்னியன் :- அப்படியொன்றும் அதிசயமான காரியத்தை ஆற்ற வேண்டியதில்லை. சிறு வேலை தான்.

அமைச்சர் :- சொல்லுங்கள்,

சின்ன வன்னியன் :- எமது காடு மிகப் பரந்தது. காட்டுப் பிரதேசத்தில் வாழ்பவர்கள் என்பதால் தானே எமக்கு "வன்னியர்" என்ற பெயரும் வந்தது.

அமைச்சர் :- அரசே "வனம்" என்ற வடமொழிச் சொல் காட்டைக் குறிக்கிறது. அதனால் வனத்தை ஆள்பவர்களும், வனத்தில் வாழ்பவர்களும் வன்னியர்கள் என அழைக்கப்பட்டனர். அதுமட்டுமல்ல...... அரசே!........

சின்ன வன்னியன் :- வேறு காரணமும் உண்டோ?

அமைச்சர் :- ஆம்..... அரசே! வன்னி என்றால் நெருப்பு என்றும் பொருள், "நெருப்பைப் போன்றவர்கள்" என்ற பொருளிலும் வன்னியர் என நாம் அழைக்கப்படுகின்றோம்.

சின்ன வன்னியன் :- ஆம்..... ஆம்... பகைவர்களைக் கொன்று குவித்து எரித்து அழிப்பதில் நாம் நெருப்பைப் போன்றவர்களே. கோபமும், வீரமும், அடங்காக் குணமும் கொண்ட எங்களுக்கு வன்னியர் என்ற பெயர் சாலப் பொருந்தும்.

அமைச்சர் :- இந்த மண்ணின் மேல் அடங்காப் பற்றுக் கொண்டவர்கள் நாங்கள் என்பதனால் தானே எமது பிரதேசம் "அடங்காப் பற்று" என அழைக்கப்படுகிறது.

சின்ன வன்னியன் :- ஆம் அமைச்சரே! நல்லது.... அமைச்சரே! எமது காட்டு வளங்களிலே யானையே மிகவும் பெறுமதி வாய்ந்தது.

அமைச்சர் :- அடங்காப் பற்றின் பாதுகாப்பே யானைப் படையினாற் தானே நிகழ்கின்றது.

சின்ன வன்னியன் :- ஆம்..... அதனால், எமது யானைப் படையை இன்னும் விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. அத்தோடு........

அமைச்சர் :- ஏன் நிறுத்திவிட்டீர்கள், சொல்லுங்கள் அரசே!

சின்ன வன்னியன் :- சில மதயானைகள் நாகந் திருக்கோவில் கிராமப் புறங்களில் புகுந்து மக்களுக்குத் தொல்லை கொடுக்கின்றனவாம்.

அமைச்சர் :- காட்டு விலங்குகளினால் துன்பம் ஏற்படாது, நாட்டு மக்களைக் காப்பது மன்னர்களின் முக்கியமான கடமைகளில் ஒன்று.

சின்ன வன்னியன் :- மதயானைகளைப் பிடித்து அடக்கிப் போர்ப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

அமைச்சர் :- அதொன்றும் பெரிய காரியமில்லையே...... யானை பிடிக்கும் பணிக்கர்கள் பலர் நம்மிடம் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக யானைகளைப் பிடித்து விடலாம்.

சின்ன வன்னியன் :- அமைச்சரே! எமது அனுமதிபெற்ற ஆனைப்பணிக்கர்களை நான் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள்.

அமைச்சர் :- அப்படியே ஆகட்டும்.

## காட்சி - 2

இடம் :- அரண்மனை

பாத்திரங்கள் :- சின்னவன்னியன் (அரசன்), வேலப்பணிக்கர், நீலப்பணிக்கன், பாலப்பணிக்கன், சில பணிக்கர்கள், அமைச்சர்.

அமைச்சர் :- (சின்னவன்னியன் சபைக்கு வருகிறார்) வன்னியர் குலதிலகம், சின்ன வன்னியனார் சேவடிகளுக்கு எம் வணக்கங்கள்.

சின்னவன்னியன் :- வணக்கம் அமைச்சரே....... அமருங்கள்.

பணிக்கர்கள் :- ராஜாதிராஜ, ராஜமாத்தாண்ட, ராஜகெம்பீர, ராஜகுலதிலக, சின்ன வன்னியனாருக்கு எமது சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

சின்னவன்னியன் :- வணக்கம், அமருங்கள், எமது ஆனை மறிகாரர்கள் ஆகிய ஏழு ஊர்ப் பணிக்கர்களும் வந்து விட்டார்களா?

அமைச்சர் :- ஆம் அரசே!

சின்னவன்னியன் :- எமது யானைப் படையை விஸ்தரிக்கவும், மதம் பிடித்த யானைகளின் தொல்லை யிலிருந்து மக்களைக் காப்பாற்றவும், அவசரமாக யானைபிடிக்கும் தொழிலை நீங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

வேலப்பணிக்கர் :- தங்கள் ஆணையை ஏற்று இப்போதே ஆனைகளைப் பிடிக்கத் தயாராக இருக்கிறோம்.

சின்னவன்னியன் :- அவசியமில்லாமல் எந்த யானையையும், கொல்லாதீர்கள். யானையைக் கொல்வ தாயின் தனியான அனுமதியைத் தகுந்த காரணங்காட்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது ஞாபகம் இருக்கட்டும்.

நீலப்பணிக்கன் :- யானைகள் எங்கள் சொத்துக்கள், அடக்கிப் பிடித்துப் பழக்கிப் பணிய வைப்பதே எம்கடமை.

சின்ன வன்னியன் :- இந்தத் தடவையும் வேலப்பணிக்கரே தலைமை தாங்கிச் செல்லட்டும். அதற்குரிய உத்தரவுப் பத்திரத்தையும், வேண்டிய உதவிகளையும் அமைச்சர் செய்வார்.

வேலப்பணிக்கர் :- நன்றி அரசே!

## காட்சி - 3

இடம் :- மரத்தடி

பாத்திரங்கள் :- நீலப்பணிக்கன், பாலப்பணிக்கன்

பாலப்பணிக்கன் :- என்ன நீலப்பணிக்கரே! சோகத்தில் துவண்டுபோயிருக்கிறீர்... இம்முறையாவது ஆனைப்பணிக்கர்களின் தலைமைப் பதவி உமக்குக் கிடைக்குமென்று எதிர்பார்த்தேன். ஆனால் இம்முறையும் கைநழுவிப் போய்விட்டது.

நீலப்பணிக்கன் :- ஓய் பாலப்பணிக்கரே! எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்காதையும் காணும். அந்த

வேலப்பணிக்கன் இருக்கிறவரை அந்தப் பதவி எனக்குக் கிட்டாது காணும். அவன் அரசனை எப்படி மயக்கி வைத்திருக்கிறானோ.

பாலப்பணிக்கன் :- கரடிகளும், புலிகளும், பன்றிகளும், நிறைந்த காடுகளுக்குச் சென்று உயிரைப் பணயம் வைத்து யானைகளைப் பிடிப்பது நாங்கள். ஆனால் பெயரும் புகழும், பதவியும் வேலப்பணிக்கனுக்கு, என்ன காணும் நீலப்பணிக்கரே, இது அநியாயமாக இல்லையா?

நீலப்பணிக்கன் :- ஓய் பாலப்பணிக்கரே! மெல்லப் பேசும். யார் காதிலாவது விழுந்துவிடப்போகிறது. வேலப்பணிக்கனின் தந்தை அனுபவித்த தலைமைப் பதவியை வேலப்பணிக்கனும் அனுபவிக்கிறான். எல்லாம் பரம்பரை வழி ராச்சியமாகி விட்டது.

பாலப்பணிக்கன் :- நீலப்பணிக்கரே! பேசிப் பயனென்ன? வீணாக மன்னரின் பகையைத்தான் சம்பாதிக்கவேண்டி வரும்.

நீலப்பணிக்கன் :- இம்முறையாவது வேலப் பணிக்கனையும், நடுக் காட்டுக்கு அழைத்துச் சென்று, அடக்க முடியாத மதயானையிடம் சிக்கவைத்தால்தான் சரி.

பாலப்பணிக்கன் :- நீலப்பணிக்கரே! நீர் நினைப்பதுபோல வேலப்பணிக்கன் அவ்வளவு சாதாரண மானவன் அல்லக்காணும். நீர் தலைமைப்

பதவிக்காகப் பொறாமை கொண்டு அவனது திறமையைக் குறைத்து மதிப்பிடுவது முறையல்ல, காணும்.

நீலப்பணிக்கன் :- அப்படி என்ன சாதனையைச் செய் திருக்கிறான் அந்த வேலப்பணிக்கன். சொல்லும் பார்ப்பம். பாலப்பணிக்கரே.

பாலப்பணிக்கன் :- முன்பொரு தடவை, எங்களால் கோபப் படுத்தப்பட்டு மதம் பிடித்து வெறிகொண்டு, நாட்டுக்குள் நுழைந்து பல உயிர்களைப் பழிவாங்கிய கொம்பன் யானையை, வேலப்பணிக்கன் தானே அடக்கினான், அதை மறந்து விட்டீரே.

நீலப்பணிக்கன் :- அது களைத்துப்போய் நிற்கும் போது பிடித்துக் கட்டினான். அது பெரிய சாதனையோ.

பாலப்பணிக்கன் :- நீலப்பணிக்கரே! என்னதான் பொறாமை இருந்தாலும், ஒருவனது திறமையை இந்த அளவு மட்டமாகப் பழிக்கக்கூடாது. அந்தக் கொம்பன் யானையின் அட்டகாசத்தைக் கண்டு எல்லாப் பணிக்கர்களுமே அஞ்சி, ஓடியபோது, வேலப்பணிக்கன் தான் சென்று அதைக்கட்டினான். என்ன மந்திரம் போட்டானோ, மாயஞ் செய்தானோ, மதம்பிடித்த யானை பால்குடித்த பூனையாக அடங்கி நின்றதே.

நீலப்பணிக்கன் :- சரி.... சரி.... போதும் போதும். வேலப்பணிக்கனின் வீரம் எல்லாம் அவன்

கலியாணம் முடிக்கும் முன்புதான். இப்போது அவனது மனைவி அரியாத்தை, அவனைத் தன் முந்தானைக்குள் அல்லவா முடிந்து வைத்திருக்கிறாள்.

பாலப்பணிக்கன் :- மதம் பிடித்த ஆனையையே அடக்குகின்ற வேலப்பணிக்கனை, அவனது மனைவி அரியாத்தை அடக்கி வைத்திருக்கிறாளோ..... அந்த வீட்டு விவகாரம் அப்படியோ........

நீலப்பணிக்கன் :- இல்லாவிட்டால் எங்களை நடுக்காட்டுக்கு அனுப்பிவிட்டு தான் நாட்டெல்லையில் தங்குவானா.......

## காட்சி - 4

இடம் :- அரண்மனை

பாத்திரங்கள் :- சின்ன வன்னியன் (அரசன்), அமைச்சர்.

சின்ன வன்னியன் :- அமைச்சரே! நாகந் திருக்கோவிலில் மதம்பிடித்த கொம்பன் யானையொன்று வந்துநிற்பதாகவும், அது நாட்டு மக்களுக்குப் பெருந்துன்பம் கொடுப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது.

அமைச்சர் :- ஆம் அரசே! மதம்பிடித்த அந்த யானை மக்களின் சொத்துக்களுக்குப் பெரும் சேதம் விளைவித்துவிட்டது.

சின்ன வன்னியன் :- அமைச்சரே! பணிக்கர்கள் மூலமாக அந்த யானையை உடனே அடக்கிக் கட்ட ஏற்பாடு

செய்யுங்கள். யானை பிடிக்கக் காட்டுக்குச் சென்ற பணிக்கர்கள் வந்து விட்டார்களா?

அமைச்சர் :- அரசே! அவர்களால் கோபப்படுத்தப் பட்டுத்தான், அந்தக்கொம்பன் யானை மதம் பிடித்து நாட்டுக்குள் நுழைந்திருக்கின்றது. அவர்கள் அந்த யானையை அடக்க அஞ்சுகிறார்கள்.

சின்ன வன்னியன் :- பணிக்கர்களே பயந்து நடுங்கினால் குடிமக்கள் நிலை என்னாவது, வேடிக்கை பார்த்திருக்க இதுவல்ல நேரம்.

அமைச்சர் :- பணிக்கர்களை அவசரமாக அழைத்து யானையைப் பிடிக்கும்படி உத்தரவிட்டேன். ஆனால் அவர்களோ அஞ்சி நடுங்கி நிற்கிறார்கள். அதனால்....... (தயக்கத்துடன்)

சின்ன வன்னியன் :- அதனால்...... என்ன செய்வதாக உத்தேசம்.

அமைச்சர் :- அதனால் வில் வீரர்களைக் கொண்டு விஷ அம்பெய்து அந்த யானையைக் கொன்றுவிடலாம், அதுதான்...... தங்கள் அனுமதியை நாடி நிற்கிறேன்.

சின்ன வன்னியன் :- அமைச்சரே! விஷ அம்பெய்து யானையைக் கொல்வதா? வேண்டாம்! வேண்டாம்.

அமைச்சர் :- பணிக்கர்களால் அடக்கமுடியாவிட்டால் வேறு என்னதான் செய்யலாம், சொல்லுங்கள்.

சின்ன வன்னியன் :- ம்..... ம்.... (யோசித்துவிட்டு) அமைச்சரே! வேலப்பணிக்கரை யானை பிடிகாரர்களின் தலைவனாக நான் நியமித்ததில் சில பணிக்கர்களுக்கு மனத்தாங்கல் இருப்பதாக ஒற்றர்கள் கூறினார்கள்.

அமைச்சர் :- நானும் கேள்விப்பட்டேன். ஆனால்..... ஆனால் வேலப்பணிக்கர் மிகுந்த திறமைசாலி. பரம்பரை பரம்பரையாக விசுவாசம் மிக்க குடியில் பிறந்தவர்.

சின்ன வன்னியன் :- ஆனால்..... அண்மைக் காலங்களில் யானை பிடிக்கும் தொழிலில் அவர் நேரடியாக ஈடுபடுவதில்லை என்றும், ஏனைய பணிக்கர்கள் மூலமாகவே யானைபிடி நடைபெறுவதாகவும் செய்தி வந்திருக்கிறது.

அமைச்சர் :- ஆம்..... உண்மைதான்..... ஆனால்......

சின்ன வன்னியன் :- என்ன ஆனால்...... ஏன்..... இப்படிச் செய்தாலென்ன (கோபமாக)

அமைச்சர் :- எப்படி

சின்ன வன்னியன் :- நாகந் திருக்கோவிலிலே வந்துநின்று நாசஞ் செய்யும் மதம்பிடித்த யானையை, யார் அடக்குகின்றாரோ அவருக்கே பணிக்கர் தலைமைப் பதவியைக் கொடுப்போம்.

அமைச்சர் :- நல்லது முயன்று பார்ப்போம்.

## காட்சி - 5

இடம் :- அரண்மனை

பாத்திரங்கள் :- சின்னவன்னியன்(அரசன்), வேலப்பணிக்கர், நீலப்பணிக்கன், பாலப்பணிக்கன், சில பணிக்கர்கள்

சின்ன வன்னியன் :- பணிக்கர்களே! நீங்கள் காடுகளுக்குச் சென்று யானை பிடிக்கிறீர்கள். ஆனால் கொடிய கொம்பன் யானையொன்று மதம் பிடித்துக்கொண்டு வந்து நாகந்திருக்கோவிலில் நிற்கிறதாம்.

வேலப்பணிக்கர் :- ஆம் அரசே! அது சாதாரணமான யானைகள் போன்றதல்ல, நீண்ட கொம்புகள் கொண்டது. மதமும் பிடித்திருக்கிறது. (தயக்கத்துடன்)

நீலப்பணிக்கன் :- அதன் பிளிறலைக் கேட்டாலே நடுக்கம் பிடிக்கிறது. அது ஏழு முழ யானை. பென்னம்பெரிய கொம்புகள் இருக்கின்றன.

பாலப்பணிக்கன் :- காட்டில் பலதடவைகள் அந்த யானையால் துரத்தப்பட்டு மரத்தில் ஏறித் தப்பித் திருக்கிறோம்.

சின்ன வன்னியன் :- வேடிக்கையாக இருக்கிறது பணிக்கர்களே உங்கள் பதில், வேடிக்கையாக இருக்கிறது. அது என்ன அட்டதிக்கு யானைகளில் ஒன்றா? அல்லது அமரர்கோமான் தேவேந்திரனின் ஐராவதமா? வேலப்பணிக்கரே! என்ன மௌனஞ் சாதிக்கிறீர்.

வேலப்பணிக்கர் :- அது பணிக்கர்களால் கோபப்படுத்தப்பட்டு மதம் பிடித்து நிற்கிறது அரசே.

நீலப்பணிக்கன் :- மிகவும் பயங்கரமான யானை அரசே. அது இடி முழக்கம்போன்று பிளிறுகிறது.

சின்ன வன்னியன் :- நீலப்பணிக்கரே! யானை பயங்கரமாக இருப்பதால் தான் உங்களை அழைத்திருக்கிறேன்.

பாலப்பணிக்கன் :- அரசே! சிறிய விண்ணப்பமொன்று. விஷ அம்பெய்து கொன்று விடுவோம். என்ன நீலப்பணிக்கரே!

நீலப்பணிக்கன் :- ஆம் அரசே. அதுதான் நல்ல யோசனை. பாலப்பணிக்கர் சொல்வதுபோல் செய்வோம்.

சின்ன வன்னியன் :- பணிக்கர்களே! மிகவும் கேவலமாக இருக்கிறது உங்கள் வீரம். யானையைப் பிடித்து அடக்கும் நீங்களே யானைக்கு இப்படி அஞ்சுவதா?

நீலப்பணிக்கன் :- அது..... வந்து அரசே...... அது மதம் பிடித்த யானை.

பாலப்பணிக்கன் :- பெரிய கொம்புகள்.

சின்ன வன்னியன் :- பணிக்கர்களே! அந்த மதம்பிடித்த யானையை அடக்கிப் பணியவைக்க வல்ல மனோதிடமும், வீரமும் கொண்ட ஒரு ஆண்மகன் உங்களில் ஒருவருமே

இல்லையா? அவமானம்...... அவமானம்...... உங்கள் பரம்பரைக்கே அவமானம். உங்களை எல்லாம் இந்த அடங்காப்பற்று இராச்சியத்தில் ஆண்கள் என்று சொல்லவே வெட்கமாக இருக்கிறது, கேவலம்.

பாலப்பணிக்கன் :- அரசே! அந்த யானையைப்பிடித்து அடக்கும் வல்லமை வேலப்பணிக்கருக்குத் தான் இருக்கிறது.

நீலப்பணிக்கன் :- வேலப்பணிக்கரால் முடியாது, வேலப் பணிக்கரின் மனைவிதான், அடக்குவாள் (எல்லோரும் சிரிக்கிறார்கள், சலசலப்பு)

சின்ன வன்னியன் :- நிறுத்துங்கள், கேலிக்கு இதுவல்ல நேரம். அந்தக் கொம்பன் யானையை எவர் பிடித்து அடக்கிக் கட்டுகிறாரோ, அவரே இனிப் பணிக்கர்களுக்குத் தலைவன்.

## காட்சி - 6

இடம் :- வேலப்பணிக்கரின் வீடு

பாத்திரங்கள் :- அரியாத்தை, வேலப்பணிக்கர்

அரியாத்தை :- ஏன் இவ்வளவு வாட்டமாக இருக்கிறீர்கள்.

வேலப்பணிக்கர் :- ம்...... (பெருமூச்சு) ஒன்றுமில்லை அரியாத்தை.

அரியாத்தை :- உங்கள் முகம் ஏன் இப்படிக் கறுத்துச் சுருங்கிப் போய் இருக்கிறது. சொல்லுங்கள். என்ன நடந்தது.

வேலப்பணிக்கர் :- ஒன்றும் இல்லை அரியாத்தை.

அரியாத்தை :- என்னிடம் சொல்லமுடியாத ரகசியமா அது. எழுந்து கை, கால், முகம் கழுவிவிட்டு வாருங்கள் சாப்பிடலாம்.

வேலப்பணிக்கர் :- பசியில்லை........

அரியாத்தை :- ஏன் இப்படிச் சோர்வாக இருக்கிறீர்கள்....... சொல்ல மாட்டீர்களா?

வேலப்பணிக்கர் :- அரியாத்தை....... ஒன்றும் கேட்காதே.

அரியாத்தை :- நான் என்ன தவறு செய்தேன். நான் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்.

வேலப்பணிக்கர் :- ஒன்றுமில்லை. அரியாத்தை என்னை...... என்னை....... ம்..... அதை எப்படிச் சொல்லுவது.

அரியாத்தை :- சொல்லமாட்டீர்களா? எங்கள் குடும்ப வாழ்க்கையின் அந்நியோன்னியம் இவ்வளவு தானா? வேலப்பணிக்கரும் அரியாத்தையும் நடத்துகின்ற குடும்ப வாழ்க்கைச் சிறப்பு இதுதானா? சொல்லுங்கள்.

வேலப்பணிக்கர் :- நாகந் திருக்கோவிலில் மதம் பிடித்த கொம்பன் யானை ஒன்று வந்து நிற்கிறது.

அரியாத்தை :- தெரிந்த செய்திதான். அதைப் பிடித்து அடக்கிக் கட்ட வேண்டியது தானே.

வேலப்பணிக்கர் :- ஆனால் அது அவ்வளவு சுலபமானதல்ல. அரியாத்தை.

அரியாத்தை :- ஆனை மறிகாரரின் தலைவரான உங்களாலேயே முடியாதுபோனால், இந்த வன்னி மண்ணில் ஒரு வீரன் இனித்தான் பிறந்து வரவேண்டும்.

வேலப்பணிக்கர் :- அடக்கமுடியா தென்றில்லை..... ஆனால்.......

அரியாத்தை :- சொல்லுங்கள்.......

வேலப்பணிக்கர் :- எங்கள் சின்ன வன்னியனார், அந்த யானையை அடக்கிக் கட்டவல்ல வீரன் யாருமே இல்லையா என்று கேட்டார் அரியாத்தை.

அரியாத்தை :- இதோ இந்த வேலப்பணிக்கர் இருக்கிறார் என்று சொல்லிப் புறப்பட்டிருக்க வேண்டியதுதானே.

வேலப்பணிக்கர் :- ஆனால்...... அது

அரியாத்தை :- அது என்ன அட்டதிக்கு யானைகளிலொன்றா? அல்லது ஐராவதமா? மகாவிஷ்ணுவின் அருள்பெற்ற கஜேந்திரனா? அல்லது தாருகாவனத்து முனிவர்கள் சிவபெருமான் மேல் ஏவிய யானையா? என் கணவர் வேலப்பணிக்கருக்குப் பணியாத யானையும் இப்பாரிலுண்டா?

வேலப்பணிக்கர் :- அரியாத்தை!..... நான் பதிலொன்றும் சொல்லாமல் ஏதோ யோசனையில் இருந்து விட்டேன். அதற்குள்.....

அரியாத்தை :- அதற்குள் வேறொரு பணிக்கன் தானே அடக்குவதாகக் கூறிவிட்டானோ? அப்படி யாராவது அடக்கினாலும் அதுவும் உங்களுக்குப் பெருமைதானே! ஏனென்றால் நீங்கள் தானே ஆனை பிடிக்கும் பணிக்கர்களின் தலைவன்.

வேலப்பணிக்கர் :- இல்லை அரியாத்தை..... எல்லோருமே அந்த யானைக்குப் பயந்து மௌனம் சாதித்தார்கள்.

அரியாத்தை :- பின்பு என்ன நடந்தது.

வேலப்பணிக்கர் :- பாலப்பணிக்கன் "வேலப்பணிக்கரே அந்த யானையை அடக்க வல்லவன்" என்றான்.

அரியாத்தை :- சரியாகத்தான் சொன்னான். அதற்கேன் கவலை.

வேலப்பணிக்கர் :- அதுவல்ல பிரச்சினை அரியாத்தை, நீலப்பணிக்கன் அத்தனைபேர் மத்தியில், அரசன் முன்னிலையில்.......................

அரியாத்தை :- என்ன சொன்னான்......... சொல்லுங்கள்,

வேலப்பணிக்கர் :- "வேலப்பணிக்கரில்லை, வேலப்பணிக்கரின் மனைவி தான் கட்டுவாள்" என்று ஏளனமாக பேசிவிட்டான்.

அரியாத்தை :- ஆ...... அரசன் முன்னிலையில், அவையில் பேசும் பேச்சா இது.

வேலப்பணிக்கர் :- அதைக் கேட்டு எல்லாப் பணிக்கர்களும் பரிகாசமாகச் சிரித்தார்கள். அந்த யானையை நான் இனிச் சென்று அடக்கினாலும். அடக்காவிட்டாலும் இரண்டுமே எனக்கு அவமானந்தான். (கவலையோடு)

அரியாத்தை :- உங்கள் அவமான உணர்வு எனக்குப் புரிகிறது. அவர்கள் சொன்னது போலவே நானே சென்று அந்த யானையை அடக்கி, அவர்களின் வாயையும் அடக்கிக் காட்டுகிறேன்.

வேலப்பணிக்கர் :- அரியாத்தை.......

அரியாத்தை :- தயவுசெய்து என்னைத் தடுக்காதீர்கள். மான் வார்க்கயிறும். உங்கள் அங்குசமும், என்கையில் தந்து என்னை அனுப்பிவையுங்கள்.

வேலப்பணிக்கர் :- அரியாத்தை! நான் உயிரோடு இருக்கும் பொழுது நீ யானை கட்டச் செல்வதா?

அரியாத்தை :- யானை கட்டவல்ல........ என் கணவரையும் எங்கள் குடும்ப வாழ்க்கையையும் பழித்தவர்களின் வாயைக் கட்டச் செல்கிறேன், விடை தாருங்கள்.

வேலப்பணிக்கர் :- (பல்லி சொல்கிறது) அரியாத்தை பல்லி சொல்கிறது. நீ நில், நானே சென்றுவருகிறேன்.

அரியாத்தை :- தயவு செய்து என்னை அனுப்பிவையுங்கள்.

வேலப்பணிக்கர் :- என்றுமில்லாத ஒரு வழக்கமிது. சரி சென்றுவா. (பல்லிசொல்கிறது) **ஆ**னால் இன்று வேண்டாம் நாளை சென்றுவா. இப்போது சகுனங்கள் சரியில்லை

## காட்சி - 07

இடம் :- வேலப்பணிக்கரின் வீடு

பாத்திரங்கள் : வேலப்பணிக்கர், அரியாத்தை

(அரியாத்தை புதுப்பானையில் பொங்கலிட்டு காளிக்குப் படைக்கிறாள்.)

அரியாத்தை : காளியாச்சி! என் காரியம் வெற்றிபெற நீதான் துணை. என் கணவனுக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்கப் புறப்படுகிறேன். வீரபத்திரரே! நீரே தஞ்சம். (வணங்குகிறாள். ஏழு சுருள் வெற்றிலையும், ஏழு எலுமிச்சங் காய்களும் எடுத்துக் கொள்கிறாள். மான்வார்க் கயிறு எடுத்து வலதுகையால் இழுத்துப் பெலன் பார்க்கிறாள்) **மா**ன் வார்க் கயிறு நல்ல பெலப்பாக இருக்கிறது. எனக்கு விடை தாருங்கள் நான் சென்று வருகிறேன்.

வேலப்பணிக்கர் : அரியாத்தை! இது ஒரு இடத்திலும் இல்லாத வழக்கம். நான் இருக்க நீ செல்வதா? சரி சென்றுவா. இதோ என் கைத்தடி. அங்குசத்தையும் கொண்டு செல்.

அரியாத்தை : ஓட்டமும் நடையுமாகச் சென்று அந்தக் கொடிய கொம்பன் யானையை அடக்கிக் கட்டிவிட்டு வருகிறேன். (செல்கிறாள்)

## காட்சி - 08

இடம் : வழி

பாத்திரங்கள் : அரியாத்தை

(செல்கிறாள், வழியில் நாக பாம்பொன்று படமெடுத்து வழி மறிக்கிறது மகுடி இசைமூலம் காட்டலாம். சிறிது நேர இசை)

அரியாத்தை :- நாகதம்பிரானே! நான் என் கணவனின் மானத்தைக் காப்பாற்றப் போகிறேன். பழிச்சொல் சொல்லிச் சிரித்த பணிக்கர்களின் வாயை அடக்கப் போகிறேன். வழிவிடு. நாகதம்பிரானே! பணிக்கர்மார் எல்லோரும் ஆனை கட்டப் பயந்துவிட்டார். பெண்ணாகிய நான் அந்த ஆனையைக் கட்டப் புறப்பட்டிருக்கிறேன். என் கற்பொழுக்கத்தின் மீது ஆணை. நான் ஒரு பத்தினியாக இருந்தால் எனக்கு அருள்செய். என்னைச் செல்லவிடு. (பாம்பு சென்று விடுகிறது. மகுடி இசை) **நா**கதம்பிரானே! அப்படியே திரும்பிச்சென்று புற்றுக்குள் படுத்துக்கொள், (யானையின் பிளிறல் பெரிதாகக் கேட்கிறது)

அரியாத்தை :- வீரபத்திரா! காளித்தாயே! இந்த யானையை நான் அடக்க அருள்செய்யுங்கள்.
(யானை மரங்களை முறிக்கும் ஒலி, பிளிறல் ஒலி. யானை வருகிறது.)

அரியாத்தை :- வீரபத்திரரே! வேல்முருகா! நீங்களே துணை. பிள்ளையாரே! நீ யானை வடிவங் கொண்டவன். உன்னருகில் வருவதுபோல நான் வரப்போகிறேன். என் எண்ணத்தை நிறைவேற்று. (சென்று யானையின் முன் அரியாத்தை நிற்கிறாள். காலால் மண்ணை அள்ளி யானையின் முன் போடுகிறாள்.) **பி**ள்ளையாரின் முகம் உன் முகம் என்பது உண்மையென்றால், பெண்களின் கற்புக்குச் சக்தியிருக்கிறது என்பது உண்மையென்றால், உன் கையை நீட்டு கந்தா! (யானை தும்பிக்கையை நீட்டுகின்றது தும்பிக்கையைத் தொட்டுத் தடவி அன்பு செலுத்துகிறாள். கணவன் கொடுத்த பொல்லை யானை முன் போட்டு) **அ**ந்தப் பொல்லை எடுத்து என் கையிலே தா கந்தா!. (யானை தும்பிக்கையால் அதை எடுத்துக்கொடுக்கிறது) **உ**ன் காலைத்தா கந்தா! நான் உன்னைக் கட்ட (யானை காலைத் தூக்கி நிற்கிறது. மான்வார்க் கயிற்றினால் காலைக் கட்டுகிறாள்) **மு**ன்னங்காலை மடக்கு கந்தா!. நான் முதுகில் ஏற (யானை காலை மடக்குகிறது கொம்பைப் பிடித்து ஏறி முதுகில் அமர்கிறாள். அங்குசத்தை காதில் போட்டு) **வ**ன்னி மறிகாரர் எல்லோரும் வழிபார்த்து நிற்கிறார்கள் அவ்விடத்திற்கு விரைந்து செல். (யானை செல்கிறது. கண்டல் என்ற இடத்தில் உள்ள பெரிய ஆத்தி மரத்தில் யானையைக் கட்டுகிறாள்)

## காட்சி - 9

இடம் :- அரண்மனை

பாத்திரங்கள் :- சின்னவன்னியன்(அரசன்), வன்னிச்சி (அரசி) (வன்னிச்சி அரண்மனைக்குச் செல்கிறார்)

சின்ன வன்னியன் :- நாச்சி! (வன்னி அரசிகளை "நாச்சி" என்று அழைப்பது வழக்கம்) என்ன அவசரமாக வந்திருக்கிறாய். அருகே வா. நான் உனக்கு ஆச்சரியமான செய்தியொன்று சொல்லப்போகிறேன்.

வன்னிச்சி :- அப்படி என்ன ஆச்சரியமான செய்தி. முதலில் நான் உங்களுக்கொரு ஆச்சரியமான செய்தியைச் சொல்லப் போகிறேன். அதற்குத்தான் அவசரமாக வந்தேன்.

சின்ன வன்னியன் :- பணிக்கர்களை எல்லாம் பயந்து நடுநடுங்கச்செய்த மதயானை அடக்கிக் கட்டடப்பட்டு விட்டது.

வன்னிச்சி :- அதைத்தான் நானும் சொல்லவந்தேன். யார் அந்த அதிசய வீரர். வேலப்பணிக்கரா? அல்லது வேறொருவரா? யாராயிருந்தாலும், தகுந்த சன்மானம் கொடுத்துப் பெரும் பாராட்டு விழாவும் நடத்த வேண்டும்.

சின்ன வன்னியன் :- கட்டியவர் யாரென்று கேட்டால் நீ ஆச்சரியத்தில் மூர்ச்சையாய் விடுவாய்.

வன்னிச்சி :- சொல்லுங்கள். யார் கட்டினார்கள்.

சின்ன வன்னியன் :- வேலப்பணிக்கரின் மனைவி அரியாத்தை

வன்னிச்சி :- ஆ...... என்ன ஆச்சரியம். நான் அறிந்த செய்தி சரிதான். எப்படி அவளால் அந்த யானையை அடக்கிக் கட்ட முடிந்தது.

சின்ன வன்னியன் :- பெண்களின் பலம் பெண்களுக்கும் தெரிவதில்லை. பிறர் கண்களுக்கும் தெரிவதில்லை. நாம் வற்றாப்பளையில் வழிபடும் கற்பரசி கண்ணகி, கணவனின் பழியைத் துடைக்க மதுரையையே எரிக்க வில்லையா? கணவனின் உயிரைக் காப்பாற்ற நளாயினி சூரியனையே உதிக்காமல் செய்ய வில்லையா? சத்திய வானின் உயிரைச் சாவித்திரி இயம தர்மராஜனுடன் போராடி மீட்டு வரவில்லையா?

வன்னிச்சி :- நினைத்துப் பார்த்தால் நெஞ்சு நடுங்குகிறது. கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிகிறது. உடல் புளகாங்கிதமடைகின்றது.

சின்ன வன்னியன் :- கண்ணகை அம்மனை வழிபடும் வன்னிப் பெண்கள் எல்லோருமே கற்பரசிகள் தான். ஒழுக்கமுள்ள பெண்களால் சாதிக்க முடியாத தொன்று இவ்வுலகத்திலில்லை நாச்சி. அரியாத்தை யானையை அடக்கியது மட்டுமல்ல, யானைமேல் ஏறிச் சவாரிசெய்து வந்து, கண்டல் என்ற இடத்திலுள்ள பெரிய ஆத்தி மரத்திலே யானையைக் கட்டியிருக்கிறாராம்.

வன்னிச்சி :- மதயானையை வென்ற மாதரசிக்குத் தகுந்த மதிப்பளிக்க வேண்டும். வழிநெடுக நிலபாவாடை விரித்து வரவேற்று, என் கையாலேயே நானே உபசாரங்கள் செய்ய வேண்டும். பட்டுச் சேலைகளும், நவரத்தின மாலைகளும் பரிசளிக்க வேண்டும்.

சின்ன வன்னியன் :- ஆம்..... நாச்சி........ அதுதான் என் விருப்பமும், இதுவரையில் யாருக்கும் கிடைத்திராத பெரும் மதிப்பை அந்த மாதரசிக்கு வழங்க வேண்டும்.

## காட்சி - 10

இடம் :- தெரு

பாத்திரங்கள் :- நீலப்பணிக்கன், பாலப்பணிக்கன்.

நீலப்பணிக்கன் :- பாலப்பணிக்கரே! இனி நாங்கள் யார் மத்தியிலும் தலைகாட்ட முடியாது. எத்தனையோ மதயானைகளை அடக்கிப் பிடித்த எங்கள் மானம் போய் விட்டது.

பாலப்பணிக்கன் :- நீலப்பணிக்கரே! எங்களால் முடியாத காரியத்தை அந்த வேலப்பணிக்கனின் மனைவி அரியாத்தை செய்துவிட்ட பின் நாங்கள் இருந்தென்ன இறந்தென்ன.

நீலப்பணிக்கன் :- நீர் சொல்வது உண்மைதான். இது எங்களுக்கு மட்டுமல்ல. ஆண் குலத்துக்கே அவமானம். அரியாத்தை உயிரோடிருக்கும்வரை நாங்கள் ஆண்களௌன்று சொல்லி நடமாடவே முடியாது.

பாலப்பணிக்கன் :- என்ன செய்யலாம். நீலப்பணிக்கரே! சொல்லும்.

நீலப்பணிக்கன் :- இனி அரியாத்தை உயிர்வாழக் கூடாது. அரச வரவேற்பும், பாராட்டும், பரிசளிப்பும் எங்களை அவமானப் படுத்துவதாகவே அமையும், நாளை அரியாத்தை இருக்க மாட்டாள்.

## காட்சி - 11

இடம் :- அரண்மனை

பாத்திரங்கள் :- சின்னவன்னியன் (அரசன்), வன்னிச்சி (அரசி), அமைச்சர்கள், சபையோர், வேலப்பணிக்கர், மற்றும் பணிக்கர்கள்.
(அரியாத்தை இராஜ மரியாதையோடு அழைத்து வரப்பட்டு ஆசனத்தில் அமர்த்தப் படுகிறாள்)

சின்ன வன்னியன் :- அமைச்சர்களே! அறிஞர்களே! பொது மக்களே! யாராலும் அடக்கிக் கட்டமுடியாத மதயானையை அடக்கி, அதிலேறிச் சவாரி செய்து, அதைக்கட்டிய வேலப் பணிக்கரின் மனைவி அரியாத்தையின் வீரத்தைப் பாராட்டவே இங்கு கூடியிருக்கிறோம், பெண்கள் நினைத்தால் எதையும் சாதித்துக் காட்ட வல்லவர்கள் என்பதற்கு இதுவே தகுந்த சான்றாகும். இப்போது அரசி வன்னி நாச்சியார் தமது கைகளால் பட்டாடை போர்த்தி, பரிசுப்பொருட்கள் வழங்கிக் கௌரவிப்பார். இன்று அரண்மனையில்

அரசியார் தனது கையால் அரியாத்தைக்கு உணவு பரிமாறி விருந்து கொடுத்துக் கௌரவிப்பார்.

எல்லோரும் :- மதயானையை வென்ற மாதரசி வாழ்க!
வேழம் படுத்த வீராங்கனை வாழ்க!
ஆனை கட்டிய அரியாத்தை வாழ்க! வாழ்க!

வன்னிச்சி : இது கண்டியில் இருந்து கொண்டு வரப்பட்ட கண்ணறைப் பட்டு (அதை அரியாத்தைக்குக் கொடுக்கிறார்) இது தென்னிந்திய கேரளத்தில் இருந்து வந்த தொண்டித் துறைமுகத்துத் தூயவர்ணப் பட்டு (அதை அரியாத்தைக்குக் கொடுக்கிறார்) மதயானையை வென்ற மாதரசிக்கு வேழம்படுத்த வீராங்கனைக்கு, ஆனைகட்டிய அரியாத்தைக்கு நானே என் கையால் ஆபரணங்களைப் போட்டு மரியாதை செய்யப்போகிறேன். (கழுத்தில் ஆபரணங்களைப் போட்டு, காலில் சிலம்பு போட்டு கட்டியணைத்து முத்தமிடுகிறாள்.) இன்று எம்முடனே இவரை உணவருந்த அழைக்கின்றேன். பதினெட்டு வகை வரிசைகளும் செய்து வெள்ளித்தட்டில் வெற்றிலை பாக்கும் கொடுத்து மரியாதை செய்வேன்

(மரியாதைகள் முடிந்த பின்னர் வேலப் பணிக்கரிடம்)

அரியாத்தை : ஆனை கட்டியிருக்கு. அதை நீங்கள் அவிழ்த்துக் கொடுங்கள். நான் வீட்டுக்குச் செல்கிறேன். நீங்கள் விரைவாக வாருங்கள் (வணங்கிவிட்டுப் புறப்படுகிறாள்)

## காட்சி - 12

இடம் : வழி

பாத்திரம் : அரியாத்தை

அரியாத்தை : (தனியாக நடந்து செல்கிறாள்)
தலை சுற்றுதே. கண் மங்குதே. கால் சோருகுதே. வாய் வறளுகுதே. நடக்கவே முடியேல்ல. எனக்கு என்ன நடந்தது. வழியிலயே செத்துப்போவனோ? (ஒருவாறு தள்ளாடித் தள்ளாடி நடந்து வீட்டுக்கு வருகிறாள்.)

## காட்சி - 13

இடம் : வீடு

பாத்திரங்கள் : அரியாத்தை

அரியாத்தை : (நிலத்தில் வெள்ளை விரித்து பொல்லை அதில் கிடத்தி வைத்துவிட்டு படுக்கையில் படுக்கிறாள்)
எனக்கு என்னவோ செய்யுதே. அவருக்குச் சொல்லி அனுப்பவும் ஒருவரும் இல்லயே.

## காட்சி - 14

இடம் : அரண்மனை

பாத்திரங்கள் : சின்ன வன்னியன், வேலப்பணிக்கர்

வேலப்பணிக்கர் : அரசே! கெட்ட சகுனங்கள் தென்படுகின்றன.

எனது கண்கள் துடிக்கின்றன. எனது உடல் நடுங்குகின்றது. நான் வீட்டுக்குச் செல்லவேண்டும் விடை தாருங்கள்.

சின்னவன்னியன் : சரி சென்றுவாருங்கள்
(வேலப்பணிக்கர் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வருகிறார்)

## காட்சி - 15

இடம் :- வீடு

பாத்திரங்கள் :- வேலப்பணிக்கர், அரியாத்தை
(வேலப்பணிக்கர் வீட்டுக்குள் வருகிறார். அரியாத்தை துடிக்கிறாள்)

அரியாத்தை :- என்ன இது.... நெ...ஞ்.....சு வலிக்......கு....தே கண்...... ம....ங்....குதே. (இருமுகிறார்)

வேலப்பணிக்கர் :- அரியாத்த...! அரியாத்த.....! என்ன நடந்தது: ஆ....... என்ன....... இது. ஐயனே! வாயில நுரை........ ஐயோ....... அம்மாளாச்சி....... பெத்தாச்சி.....

அரியாத்தை :- ஆத்திமரத்தில நான் கட்டி வச்ச அந்த ஆனைய அவிட்டு விட்டீங்களா? அல்லது ஆரிடமும் அவிழ்க்கச் சொல்லீற்று வந்தீங்களா. அந் த...... ஆனையை அவிட்டு விடுங்கோ, நா....ன்....நா.....ன்......செத்துப் போடுவன்.....

வேலப்பணிக்கர் :- ஐயோ!....... அரியாத்த. என்ன நடந்தது..... சொல்லு.... நீ.... என்ன விட்டிட்டுப்

போயிடுவியா...... எனக்கு..... படபடப்பாய் இருந்துது. நான் ஆனையை அவிழ்க்கேல்ல. ஓடி வந்திற்றன்.

அரியாத்தை : அந்த ஆனைய அவிழ்த்து விடுங்கோ. அது அப்பிடியே நிண்டு செத்துப் போச் செண்டால் பெரும்பழி வந்திரும். என்னப் போல கற்புடைய ஒருத்தியாலதான் அந்த ஆனைய கட்டவிழ்க்க முடியும். உங்களாலும் முடியும். போய் அவிழ்த்துவிடுங்கோ.

வேலப்பணிக்கர் : அதப் பிறகு அவிழ்ப்பம். இப்ப உனக்கு என்ன செய்யுது அரியாத்த.

அரியாத்தை :- சாப்பிட்டபிறகு ...... வெத்தில மடிச்சுத் தந்தினம்...... அது..... கசப்பா...... இருந்தது.

வேலப்பணிக்கர் :- ஐயோ!..... பாவிகள்...... நஞ்சு வைச்சுப் போட்டாங்கள் அரியாத்த..... நஞ்சு வைச்சுப் போட்டாங்கள் அரியாத்த..... (அழுகிறார்)

அரியாத்தை :- நான்..... நான்..... ஆனை... அம்மாளாச்சி...... என்னைப் போல பத்தினிகள் பலர் இந்த இலங்கையில இருக்கினம். நீங்கள் கவலப் படாமல் இருங்கோ. நான்... உங்கட வலது துடையில படுக்கப்போறன். கால நீட்டுங்கோ. (அவர் காலை நீட்டி இருக்க, அவரது வலது தொடையில் படுத்தபடி இறந்துவிடுகிறாள்.)

வேலப்பணிக்கர் :- ஐயோ!..... ஐயோ!...... என்ன விட்டிட்டுப் போயிற்றியா?....... இனி நான் உயிரோட வாழமாட்டன், நானும் உன்னோடயே வந்திடுறன்.

## காட்சி - 16

இடம் : வீடு, சுடலை

பாத்திரங்கள் : வேலப்பணிக்கர், வேறு சிலர்

வேலப்பணிக்கர் : (அழுகிறார்) அய்யோ அரியாத்த என்ன விட்டிட்டுப் போட்டியா. உன்னோட நானும் வாறன். நீ எரியிற சிதையில நானும் எரிஞ்சுபோறன். உன்ன விட்டிட்டு ஒருநாளும் இருக்கமாட்டன். உன்னோட உடன்கட்ட ஏறப்போறன்.

சிலர் : இவர இப்பிடியே விட்டா அரியாத்தையின்ர சிதையில பாஞ்சு எரிஞ்சிடுவார். இவர இஞ்ச கட்டிப்போட்டுட்டுத்தான் பிணத்த எரிக்கோணும். (வேலப்பணிக்கரை வீட்டுக் கப்பில் கயிற்றால் கட்டிவிட்டுச் செல்கிறார்கள்)

வேலப்பணிக்கர் : (அழுகிறார்) அரியாத்த! நீ கற்புடையவளாக இருந்தால் உன்னோட உடன் கட்டையேற இந்தக் கட்டு அவிளாதோ. (கட்டுத் தெறிக்கிறது. எழுந்து ஓடுகிறார். அரியாத்தையை எரிக்கும் சிதையைச் சுற்றி வருகிறார். பலர் தடுக்கிறார்கள். அவர்களை மீறி சிதையில் பாய்ந்து எரிந்து இறக்கிறார்.)

முற்றும்

## குறிப்பு

- ❖ நீலப்பணிக்கனே விஷம் வைக்கக் காரணம் என்று கருதப்படுகிறது. ஒப்பாரியில் இப்பெயர் இல்லை. கூத்துக்களில் இப்பெயரே பயன்படுத்தப்படுகிறது.

- ❖ இன்னொரு பணிக்கனுக்கு பாலப்பணிக்கன் என்ற பெயர் என்னால் இடப்படுகிறது.
  ஒப்பாரியில் பொதுவாகப் பணிக்கர்கள் என்றே வருகிறது.

## நன்றி

- ❖ திரு.அ. பாலமனோகரன் - குமாரபுரம் (நாவல்)

- ❖ குமுழமருதன் (திரு.சி.தெய்வேந்திரம்பிள்ளை) - மதயானையை வென்ற மாதரசி (சிறுகதை.)

- ❖ திரு.செ.மெற்ராஸ் மயில் - வன்னிவள நாட்டுப் பாடல்கள்

- ❖ திரு.அரியான் பொய்கை - வேழம்படுத்த வீராங்கனை (நாட்டுக் கூத்து)

- ❖ திரு.அருணா செல்லத்துரை - வேழம்படுத்த வீராங்கனை (நாட்டுக் கூத்து, ஒளிநாடா)

# வேலப்பணிக்கர் ஒப்பாரி

நாகந் திருக்கோவிலிலே என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே
அங்கே நிற்குதாம் நல்ல கொம்பன். 1

கண்டவுடன் வன்னியாருக்கு என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே
அதை ஒரு காரணமாய்ச் சொன்னார்கள். 2.

சொன்ன மொழி கேட்டவுடன் என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே அவர்
ஓர்சுருள் இலை தானெடுத்து. 3.

ஏழு ஊருப்பணிக்கருக்கும் என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே அவர்
எழுதி விட்டார் ஒலைதன்னை. 4

ஓலைதனில் உள்ள செய்தி என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே அரனே
ஐயனே தஞ்சமென்று வன்னியன் முன் அன்புடன் வந்தார்கள். 5

வந்தவர்கள் தெண்டன் இட்டு என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே வன்னிமறிகாறர் எல்லாம். 6

எல்லாப் பணிக்கருமாய் இன்பமுடன் தான் நடந்து
அன்புடனே நீங்கள்சென்று அந்த ஆனைகட்டி வாருமென்றார். 7

அந்தமொழி கேட்டவுடன் என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே
பணிக்கமார் ஆலோசனை பண்ணுவராம். 8

எங்களால் ஆகாது எங்களையாளும் சின்னவன்னியனாரே
அது ஏழுமுழ யானை அல்லோ. 9

அது கோபமுள்ள யானையது எங்களை ஆளும் சின்னவன்னியனாரே
அது குளறுகுதே மாமுகில் போல் இந்தஆனை கட்டிவர
எங்களை ஆளும் சின்னவன்னியனாரே எங்களால் ஆகாது
எங்கள் வேலப்பணிக்கனால் ஆகுமென்றார். 10

அதிலொருவன் நின்றுகொண்டு வேலப்பணிக்கனால் ஆகாது
வேலப்பணிக்கன் பெண்சாதியால் ஆகுமென்றான். 11

அந்தமொழி கேட்டவுடன் என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே வேலப்பணிக்கர் அவசரமாய்த்தான்நடந்தார். 12

விடுதிதனில் வந்து மெல்லோ வேலப்பணிக்கர் அவர்
வியாகுலமாய்த் தான் படுத்தார். 13

கண்டுமவள் ஓடிவந்து என்நயிந்தை ஆண்டவனே
உமக்கு வந்த காரணத்தைச் சொல்லுமென்றாள். 14

ஒன்று மொளியாமல் என்நயிந்தை ஆண்டவனே நீரும்
உள்ளபடி சொல்லு மென்றாள். 15

யானையொன்று வந்ததென்று என்உயிரே கண்மணியே
அதை அன்புடனே கட்டிவரச் சொன்னார்காண். 16

அதிலொருவன் நின்றுகொண்டு என்னுயிரே கண்மணியே
வேலப்பணிக்கனால் ஆகுமென்றான். 17

இன்னொருவன் நின்று கொண்டு வேலப்பணிக்கனால் ஆகாது
வேலப்பணிக்கன் பெண்சாதியால் ஆகுமென்றான். 18

இத்தனைக்கோ நீர் சலித்தீர் என்னுயிரே ஆண்டவனே
எழும்பிநீர் சாப்பிடென்றாள். 19

பசியோதான் நீர்ஆறி என்நயிந்தை ஆண்டவனே
உன்னடியாள் பெண்பேதை எனக்குப்பரிவாய் விடைதாருமென்றாள். 20

யானைகட்டி வாறதற்கு என்நயிந்தை ஆண்டவனே எனக்கு
அன்பாய் விடைதாருமென்றாள். 21

ஆனைகட்டநான் போனால் என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே நான்
ஒருநாளையிலே வந்திடுவேன். 22

போய் வாறேன் என்றீரோ என்னுயிரே கண்மணியே
எனக்கு இணங்கும் நாயகியே வெகு பொல்லாப்புக் காணுகுதே. 23

பத்தையிலே பல்லியொன்று என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே அதுபலபலன்று சொல்லுகுதே. 24

செத்தையிலே பல்லியொன்று என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே அது திடுகூறாய் சொல்லுகுதே. 25

நாளும் குணமல்லவோ என்னுயிரே கண்மணியே எனக்கு
இணங்கும் நாயகியே நீர் நாளைக்குப் போமென்றார். 26

அன்றிரவு தங்கியெல்லோ வேலப்பணிக்கர் பெண்சாதி
தன் அன்பர் சொல்லைத் தட்டாமல். 27

காலம்பெற எழும்பி என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத
ஐங்கரனே தஞ்ச வீரபத்திரனே உன்தஞ்சம் எனவே நினைத்து 28

புதுப்பானை தானெடுத்து என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத
ஐங்கரனே அன்பரே ஆதரவே என்று பொங்கிவிட்டாள் காளியற்கு 29

ஏழுசுருள் வெற்றிலையும் வேலப்பணிக்கர் பெண்சாதி
ஏழு எலும்பிச்சைக் காயும் தானெடுத்து 30

மான்வாற் கயிறு எடுத்து வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தை அவ வலதுகையில் பெலன் பார்த்தா 31

யானை கட்டப் போறதற்கு என்
ஆசைத்துரையே அரியதுரை மந்திரியே - எனக்கு
அன்பாய் விடை தாருமென்றாள். 32

யானைகட்டப் போறேன் என்றீர் ஆதிவீர பத்திரனே
ஐயோ எனப் பதபதைத்து வேலப்பணிக்கர்
அவர் அழுதழுதோ சொல்லுவாராம். 33

நானிருக்க நீர் நடக்க என்ஆசை மனைவியரே அன்னமே
ஆருயிரே எனக்கு நன்றாய் இருக்கவில்லை. 34

போகவேண்டாம் என்று சொன்னால் என்நயிந்தை ஆண்டவனே
இந்தப் பூலோகத்தார் ஏசுவரே. 35

தடுத்து மறியாதே என்நயிந்தை ஆண்டவனே நீரும்
ஒரு தாமதங்கள் சொல்லாதே. 36

ஒன்றுக்கும் அஞ்சாதே என்நயிந்தை ஆண்டவனே
நீரும் போற்றி விடைதாரும் என்றாள் 37

ஐயன் கிருபையுண்டு என்னுயிரே கண்மணியே எனக்கு
இணங்கும் நாயகியே உனக்கு ஆண்டவன் சித்தம் உண்டு. 38

போய் வாரும் என்று சொல்லி வேலப்பணிக்கர் அவர்
பொல்லையுமோ கைகொடுத்தார். 39

ஓடிநடந்தல்லவோ நான் அடியாள் பெண்பேதை
நானுமொரு நொடியில் வந்திடுவேன். 40

தாள் பணிந்து தெண்டனிட்டு என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே
கஞ்சுவீரபத்திரனே உன் தஞ்சமென நடந்தாள். 41

போறவழியிலே என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே ஒருபுற் றெழுந்த நாகமொன்று 42

சீறிப்படமெடுக்க என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே அரியாத்தை பதைபதைத்து நடுங்கிநின்றாள். 43

நாடறியேன் காடறியேன் நாகதம்பிரானாரே நான் அடியாள்
பெண்பேதை எனக்கு நற்கிருபை தாருமென்றாள். 44

பணிக்கமார் எல்லோரும் என் ஏகபராபரனே நாகதம்பிரானாரே
அவர் பயந்து விட்டார் யானைகட்ட 45

பெண்பேதை கட்டவென்று என் ஏகபராபரனே நாகதம்பிரானாரே
நானும் புறப்பட்டு வந்துவிட்டேன். 46

பத்தினியாள் நானாகில் ஏகபராபரனே நாகதம்பிரானாரே
எனக்கு நற்கிருபை தாருமென்றாள். 47

அரியாத்தைதான் தொழவே அன்புடனே ஆனைகட்டி இன்பமுடன்
வாரும் என்று முன்னிருந்த புற்றதனில் நாகம் அடங்கியதே. 48

ஓடிநடந்தல்லவோ அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே
ஏன் அன்பரே ஆதரவே அவஉள்ளங்கால் தொப்பளிக்க 49

வாற பொழுதிலையோ ஆனையது மும்மதமும் தான் பொழிந்து
கைமடித்து தான்குளறி அரியாத்தைமுன்பு கொம்பன் வந்து நின்றதுவே. 50

யானையைக் கண்டவுடன் வேலப்பணிக்கன் பெண்சாதி
அரியாத்தை அவகால் கைதடுமாறி நின்றாள். 51

பாலைமரம் வீரைமரம் வேலப்பணிக்கன் பெண்சாதி அரியாத்தை
அவபடுமரத்தோடு நின்றாவே. 52

காலாலே மண்ணை அள்ளி தந்த வீரபத்திரனே மால்மருகவேல்
முருகா உன்தஞ்சம் என்றுமுன் போட்டாள். 53

கற்புடையாள் நான் ஆகில் ஆனையடி ஆனையடி ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே உன்கையைத்தான் நீட்டுமென்றாள். 54

அந்த மொழிகேட்டவுடன் யானையடி யானையடி ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில்வாகனமே அவ்வானை கையைத்தான் நீட்டியதே. 55

கையாலே கைபிடித்து அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத
ஐங்கரனே அன்பரே ஆதரவே அதன்மேல் கொடுமுத்தல்லவோ 56

காலிலிடு தேமலல்லோ என் ஆனையடி ஆனையடி ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே உனதுகண், இரண்டும் நற்தேமல் அல்லோ
57

பொல்லை யெடுத்தல்லவோ வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
போட்டாளே ஆனைமுன்பு 58

பொல்லை எடுத்து என்கையிலே ஆனைமதயானையது வேலப்பணிக்கர்
பெண்சாதி நாச்சன் அரியாத்தை கையில் பொற்புடனே தான்கொடுக்க
59

உன்காலைத்தா கந்தா ஆனையடி ஆனையடி ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே நானும் கனத்த வடம் போட்டு இழுக்க 60

முன்னங்கால் தனைக்கிழப்பி வேலப்பணிக்கன் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு முடுக்கிட்டு நின்றதுவே 61

மான்வாற்கயிறு எடுத்து வேலப்பணிக்கன் பெண்சாதி
அவமனங்குளிரப் போட்டிறுக்கி 62

முன்னங்கால் முடக்கு கந்தா ஆனையடி ஆனையடி ஆனைமதயானையடி
ஆனைமறிகாறன் மகள் ஆனைமயில் வாகனமே
நானடியாள் பெண்பேதை உன் குப்பத்தில் பாய்ந்தேற 63

முளங்காலை த்தான் மடிக்க வேலப்பணிக்கன் பெண்சாதி
அரியாத்தை அவ முன்னேநின்று தோள்பிடிக்க 64

உக்கோட்டைத்தா கந்தா ஆனையடி ஆனையடி ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே வேலப்பணிக்கன் பெண்சாதி
யானையிட கும்பத்தில் ஏறினாளே. 65

செவியைத்தாகந்தா ஆனையடி ஆனையடியானை மதயா னையடி ஆனை
மறிகாறன் மகள் ஆனைமயில் வாகனமே
நானடியாள் பெண்பேதை துறட்டிதனை போட்டிறுக்க 66

செவியைத்தான் கொடுக்க துறட்டிதனை போட்டிறுக்கி
வேலப்பணிக்கன் பெண்சாதி அரியாத்தை அவ செப்பினாள் ஓர் வசனம்
67

வன்னிமறிகாறர் எல்லாம் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே
ஆனையயிராவதமே அவை வழிபார்த்து நிற்கிறார்கள். 68

நிற்குமிடந்தனிலோ என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே ஆனையயிராாவதமே
நீரும் நிமிசத்துடன் செல்லுமென்றாள். 69

துறட்டிதனைப் போட்டிறுக்க ஆனைமதயானையது அரியாத்தைக்கு
அபயமெனக் குளறியதே 70

குளறின சத்தமது சின்னவன்னியனார் பெண்சாதி இருக்குமந்த
அரண்மனையில் கேட்டதுவே 71

யானைகட்டி வாறகதை சின்னவன்னியனார் பெண்சாதி
ஆச்சரியமாய் அறிந்து 72

வன்னியனார் முன்புவந்து என்நயிந்தை ஆண்டவனே
வேலப்பணிக்கன் பெண்சாதி நாச்சன் அரியாத்தை
அவ ஆனைகட்டி வாறாளே. 73

வேண்டும் வரிசைகளும் என்நயிந்தை ஆண்டவனே
அவளுக்கு மேலாப்பு போடுவியும் 74

பந்தலுமோ போடுவித்தார் எங்களை ஆளும் சின்னவன்னியனார்
நிலபாவாடை போடுவித்தார் 75

அன்னநடை சின்னஇடை வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தை அவஆனைகொண்டு வந்தாளே. 76

ஆனைதனைக் கொண்டு வந்து என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே நீரும்
அஞ்சாமல் நில்லுமென்றாள். 77

ஆத்திமரத்துடனே வேலப்பணிக்கர் பெண்சாதி அந்த
யானைதனைக் கட்டி வைத்தாள். 78

யானைகட்டி வந்தபின்பு எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி நாச்சன் அரியாத்தைக்கு இருக்க கதிரை போடுவித்தான். 79

வெள்ளை விரிப்பித்தாளே எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி அரியாத்தைதான் இருக்க மேலாப்பு போடுவித்தாள். 80

பெட்ட கத்தைத்தான் திறந்து எங்களையாளும் சின்ன
வன்னியனார் பெண்சாதி எடுத்துத்தர பட்டு வற்கமதை 81

கண்டியால் கொண்டு வந்த எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி ஒரு கண்ணறைப்பட்டு மொன்று. 82

தொண்டியால் கொண்டு வந்து எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி அவ தூயர்வனப்பட்டுமொன்று 83

இந்தாரும் பட்டதென்று எங்களை ஆளும் சின்னவன்னியனார்
பெண்சாதி நாச்சன் அரியாத்தைக்கு எடுத்துமல்லோ கைகொடுத்தாள் 84

கைநீட்டி வாங்காமல் வேலப்பணிக்கன் பெண்சாதி
மறு காரியமாய்ச் சொல்லலுற்றாள். 85

மறந்துதான் போகாதே எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி எங்களை அன்பாகக் காத்தருளும் 86

ஒண்ணுக்கும் அஞ்சாதே என் ஆசை அவுறுகமே ஆசைமச்சாள்
ஆதரவே நான் உள்ளமட்டும் காத்திடுவேன். 87

குற்றங்கள் வந்தாலும் என் ஆசை அவுறுகமே ஆசை மச்சாள்
தோளியரே நானும் பொன் இறுப்பேன். 88

உலாந்தா மறியல் என்றால் என் ஆசை அவுறுகமே
என் ஆசை மச்சாள் தோளியரே நானும் கூடவே தானிருப்பேன். 89

ஓன்றுக்கும் அஞ்சாதே என் ஆசைமச்சாள் தோளியரே
இந்தாரும் பட்டதென்றாள். 90

ஆபரணம் தான் போட்டு வேலப்பணிக்கன் பெண்சாதி நாச்சன்
அரியாத்தைக்கு அணியச் சிலம்புமிட்டு 91

வெற்றிலை  பாக்குகளும் எங்களையாளும் சின்னவன்னியனார் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு வெள்ளித்தட்டில் தான் கொடுத்தாள். 92

உள்ள வரிசையெல்லாம் எங்களை ஆளும் சின்னவன்னியனார் பெண்சாதி
உகந்துமல்லோ தான் கொடுத்தாள். 93

பதினெட்டு வரிசைகளும் எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி நாச்சன் அரியாத்தைக்குப் பாங்குடனே கொடுத்தாள். 94

பத்தையிலே பல்லிஒன்று என்ஆசை அவுறுகமே ஆசை மச்சாள்
தோளியரே அது பலபல என்று சொல்லுகுதே 95

செத்தையிலே பல்லி ஒன்று என் ஆசை அவுறுகமே
ஆசைமச்சாள் தோளியரே அது திடுகூறாச் சொல்லுகுதே. 96

சாகத்தான் போறேனோ என் ஆசை அவுறுகமே  ஆசை
மச்சாள் தோளியரே நானும் பிளைக்கத்தான் போறேனோ 97

ஒண்ணுக்கும் அஞ்சாதே என்ஆசை அவுறுகமே ஆசை மச்சாள்
தோளியரே நீரும் வீடுபோய் வாருமென்றார். 98

இப்பொழுதுதான் எழும்பி தன்னுடைய நாயகர் வேலப்
பணிக்கருக்கு ஒரு விண்ணப்பமாய்ச் சொல்லலுற்றாள். 99

ஆனைகட்டி நிற்குது காண்என் நயிந்தை ஆண்டவனே
அதை அவிழ்த்துநீர் கொடுத்து விடும். 100

வீட்டேநான் போறேன் காண் என் நயிந்தை ஆண்டவனே
நீரும் விரைவாக வந்துவிடும் 101

நடந்து சுறுக்காயல்லோ வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
நடுவழியில் வருகையிலே 102

வளியில் வருகையிலே வேலப்பணிக்கர் பெண்சாதி நாச்சன்
அரியாத்தைக்கு வந்ததே பெரும்துயரம் 103

கண்ணும் துடிக்குதையோ என் ஆதி பராபரமே ஆறுமுகவேலோனே
என்னுடைய கால்கள் மிகச்சோருதையோ 104

கண்ணும் மயங்குதையோ வேல்முருகா மால்மருகா வேல்முருகா
வேலோனே எனக்குக் கனத்த துயர்காலுதிப்போ 105

வாயும் வறளுகுதிப்போ வல்லிபுர மாயோனே நல்லநகர்
வேலோனே என்னுடைய வாணாள் உருகுதிப்போ 106

நடக்கவே கூடுதில்லை நாரனரே காரனரே நாகதம்பிரானாரே
எனக்கு நடக்கவே கூடுதில்லை 107

வீடுநான் போய்ச்சேர மான் மகளார் வள்ளிபர தூங்கா
வேல்முருகா சூர தூங்கா எனக்கு வழியோ தெரியவில்லை 108

இடைவழியில் நான் சாக என் ஏகபராபரனே நாகதம்பிரானாரே
எனக்கு இறைவன் கட்டளையோ 109

என் பத்தாவு மில்லாமல்ஐயோ பராபரனே உன்னடியாள்
பெண்பேதை நான் பாடுபட நீதியோ 110

தஞ்சமொருவரில்லை தற்பரனே பொற்பரனே அற்புதனே
பொற்புதனே எனக்குச் சாக்கடன் தீர்ப்பாருமில்லை 111

தள்ளாடித் தள்ளாடி வேலப்பணிக்கர் பெண்சாதி நாச்சன்
அரியாத்தை அவதம்பிரான் நன்மையினால் போய்ப் படுத்தாள். 112

வெள்ளை விரித்தல்லவோ வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
வெள்ளையின் மேல் பொல்லை வைத்தாள் 113

படுக்கைதனில் இருந்து வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
அரனே எனச் சாய்ந்தாளே 114

சாய்ந்து துயரமுடன் வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
தலைவனைத் தான் நினைத்தாள். 115

என்காயம் முடியுமுன்னே என் கண்ணாளா காதலனே
என்நயிந்தை ஆண்டவனே நீரும் கடுகிவந்து காணாயோ 116

தரிக்க மனம் கூடுதில்லை தலைவனை என்தன் உயிர்
ததும்பித் தடுமா றுதிப்போ 117

அபத்தம் வருகுதிப்போ என்நயிந்தை ஆண்டவனே
நானுமொரு அரிய புலிக்கஞ்சிவிட்டேன் 118

ஆனைக்கும் அஞ்சாள் நான் என்நயிந்தை ஆண்டவனே
நானுமொரு அரியபுலிக் கஞ்சி விட்டேன். 119

குதிரைக்கு மஞ்சாள் நான் என்நயிந்தை ஆண்டவனே
நான்ஒருகொடிய புலிக்கஞ்சிவிட்டேன். 120

மனையாள் படும்துயரம் என்நயிந்தை ஆண்டவனே நாம்
மறுபேர்க்குச் சொல்லுவேனோ 121

பாவி படுந்துயரம் என்நயிந்தை ஆண்டவனே ஐயோ
பராபரனே என்னைப் பார்ப்பார் ஒருவரில்லை 122

உனக்குச் சொல்லி அனுப்பவென்றால் என் நயிந்தை
ஆண்டவனே எனக்கு ஒரு தோளியரைக் காணேனே 123

என்று சொல்லி பெண்பேதை வேலப்பணிக்கன் பெண்சாதி
அவ இருந்து புலம்பிடவே 124

அரியாத்தை தான் புலம்பி வன்னியனார்கள் வீட்டில்
வேலப்பணிக்கர் அவர் வெகுசகுனம் கண்டாரே 125

மெல்ல எழுந்திருந்து எங்களையாளும் சின்னவன்னியனாருக்கு
ஒரு விண்ணப்பம் சொல்லுவராம் 126

கண்ணும் துடிக்குதிப்போ எங்களை ஆழும் சின்னவன்னியனாரே
எனக்குக் கனத்தகுறி காணுதிப்போ 127

மேலும் துடிக்குதிப்போ எங்களையாளும் சின்னவன்னியனாரே
ஏனக்கு இப்போ வெகுகுறிகள் காணுதிப்போ 128

வீட்டுக்குச் சொல்லவேணும் எங்களை ஆழும் சின்னவன்னியனாரே
எனக்கு விடைதந்து அனுப்பிவிடும் 129

போய்வாரும் என்றுசொல்லி வேலப்பணிக்கருக்குச் சின்ன வன்னியனார்
போகவிடைதான் கொடுத்தார். 130

ஓடிநடந்தல்லவோ வேலப்பணிக்கர் அவர்
ஒருநொடியில் வீடு வந்தார். 131

பாவிபடுந்துயரம் வேலப்பணிக்கர் அவர் பரிவுடனே ஆண்டாரே 132

பாவிபடுந்துயரம் வேலப்பணிக்கர் அவர் பரிவுடனே கண்டாரே 133

என்கண்ணில் முளிக்கவென்றோ என்நயிந்தை ஆண்டவனே
கண்ணாளா காதலனே நீரும் கண்ணெதிரே வந்தீரோ 134

படுந்துயரம் பார்க்கவென்றோ என்நயிந்தை ஆண்டவனே நீரும்
பதைபதைத்து வந்தீரோ 135

நான்பட்டபாடு சொல்ல என் நயிந்தை ஆண்டவனே இந்த 136

ஐந்து வயதிலையோ என் நயிந்தை ஆண்டவனே
நீரும் என்னை அன்பாய் மணம் முடித்தீர் 137

பதினாறு வயதுமட்டும் மனப்பட்சம் மறவாதிருந்தோம் 138

ஆயுள் முடியுதுகாண் என் நயிந்தை ஆண்டவனே என்
துன்பத்தை விட்டு விடும் 139

ஆத்தி மரத்துடனே என் நயிந்தை ஆண்டவனே நானு
மந்த யானை கட்டிவைத்தேன். 140

யானை அவிட்டீரோ என் நயிந்தை ஆண்டவனே ஆருமதை
அவிழ்க்கச்சொல்லி வந்தீரோ 141

யானை அவிழ்க்கவில்லை என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே எனக்கு அங்கமெல்லாம் பதைபதைத்து 142

மீண்டும் வருவேன் என்று என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே நானும் விளம்பி வந்தேன் வன்னியற்கு 143

உனக்கு வருத்த மென்ன என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே நீரும் உள்ளபடி சொல்லுமென்றார். 144

எனக்கு வருத்தமென்ன என்நயிந்தை அது
இன்னதென்று சொல்லறியேன். 145

கட்டோடே ஆனைநிற்கு என்நயிந்தை ஆண்டவனே அது
கயமிரதம் கொண்டுமே 146

கட்டவுக்கப் பேருமில்லை என்நயிந்தை ஆண்டவனே
அங்கே ஒரு காரியப்பேர் தானுமில்லை 147

கந்தன் இறந்துவிட்டால் என்நயிந்தை ஆண்டவனே
எனக்குக் கனபாவம் வந்திடுமே 148

யானைதனை அவிழ்க்க என்நயிந்தை ஆண்டவனே என்னைப்
போல் யாருமொரு கற்புடையாள். 149

ஏழுசுருள் வெற்றிலையும் என்நயிந்தை ஆண்டவனே
எடுத்துமவள் கைபிடித்து 150

கும்பிட்டுத் தெண்டனிட்டு என்நயிந்தை ஆண்டவனே
அங்கே கொண்டு கொம்பன் முன்நின்றால் 151

அப்பல்லோ யானையது என்நயிந்தை ஆண்டவனே கந்தன்
அவிழ்க்க வல்லோ கால்கொடுப்பான். 152

கட்டை அவிழ்த்தாலும் என்நயிந்தை ஆண்டவனே
கந்தன் கருதித் தண்ணீர் தான் குடியான் 153

எப்படித்தானானாலும் என்நயிந்தை ஆண்டவனே
எனக்கேற்றபடி தான் நடக்கும் 154

நானும் இறப்பதல்லால் என்நயிந்தை ஆண்டவனே நானும்
மிருப்பதொரு நாளுமில்லை 155

என்றுமிருந்தது போல் என்நயிந்தை ஆண்டவனே நீரு
மிருப்பீர் மனமகிழ்வாய் 156

அடியாள் இறந்தாளென்று என்நயிந்தை ஆண்டவனே
நீரும் அருந்துயரம் கொள்ளாதீர். 157

என்னைப்போல் கன்னியர்கள் என்நயிந்தை ஆண்டவனே
எத்த னையோ தானிருப்பார். 158

என்னைப்போல் கற்புடையாள் என்நயிந்தை ஆண்டவனே
இந்த இலங்கையிலே மெத்த உண்டு. 159

அன்பாக நீர்இருப்பீர் என்நயிந்தை ஆண்டவனே
நீரும் அருந்துயரம் கொள்ளாதீர் 160

முகத்தோடை முகத்தை வைத்து வேலப்பணிக்கர் அவர்
மொழிவார் சிலவார்த்தை 161

முந்திவந்த பூ எனக்கு நான் எடுத்து நான் அணைத்து நான்
பூசும் சந்தனமே அதுபேய் வாங்கிக் கொண்டிடுமே 162

வலதுதுடை தாருமென்றாள் என்நயிந்தை ஆ்ண்டவனே
நானும் மனமகிழ் வாய்ச் சாய்ந்துகொள்ள 163

ஆருயிரே ஆதரவே ஆசைமட மாமயிலே உன்னுடைய
துன்பமது தீருமட்டும் 164

வலது துடை மேல்கிடக்க வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தையுடைய சீவன் ஒரு வண்டாயப் பறந்ததுவே 165

காலும் எறிந்தாப்போல் வேலப்பணிக்கன் பெண்சாதி அவ
கண்ணும் முளித்தாப்போல் 166

வாயால் நுரை தள்ளிடவே வேலப்பணிக்கன் பெண்சாதி
அரியாத்தையுடைய வாணாள்முடியுமுன்னே
வேலப்பணிக்கர் மண்மேல் விழுந்தழுதார். 167

யானை கட்டப் போனடத்தே ஆதரவே ஆருயிரே ஆசைமடமாமயிலே
உனக்கு ஐயங்காச்சி பட்டதுவே 168

உனக்குப் பேய்தான் பிடித்ததுவோ என் பேர் பெரியநாயகியே
தீர் உடைய தேவியரே உனக்குப் பெல்லிப்பேய் விட்டினமோ 169

கண்விழித்துப் பாரீரோ என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகி நீரும் என் முகத்தைப் பாரீரோ 170

ஆயிரம் யானைப்பணிக்கர்என் ஆசைக்கிளியே அரிய கயிலாயமே
பொன் தேன் மொழியாளே உன்னை அனுப்பிவிடார் என்னிடத்தில்
171

என்னமோ நானறியேன் எனக்கின்பமுள்ள தேவியரே
பண்புபோலோவியமே
ஏதுதான் செய்வேனோ என்னையவர் தானறிவார் 172

இந்த உலகத்திலுள்ளவர்கள் ஏதுக்குப் போதுமென்றார். 173

உந்தன் பசாசுகளை உத்தமியே பத்தினியே
சித்திரமே தேவியரே நானும் ஒரு மிக்கத் தானணைப் பேனே. 174

அந்தத்துக் கோவனத்தில் என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே நானும் அறுதி என்று அனுப்பிவிட்டேன். 175

கோட்டிலே அல்லாதே என் கோலக்குடிவானே வாலைப்புதுமயிலே
எனக்குச் சினம் தீராதே. 176

உன்னையுமே கொண்டவனார் என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே நானும் உடனே அறிந்தேனென்றால் 177

உன்னுடனே கொண்டுவந்து எனக்குற்றதுணைவியரே வெற்றி
மனைவியரே நானும் உடனே வதைத்திடுவேன். 178

உன்னோடிங் கிறப்பதல்லால் எனக்குற்ற துணைவியரே வெற்றி
மனைவியரே நானுமிந்த ஊரிலிருப்பேனோ 179

நீயே என் பெண்சாதியாயிருந்தால் நான் எடுத்து நான் வளர்த்து
நான் பூசும் சந்தணமே நீயென்னைப் பேணியே பாராமல் 180

கட்டையிலே உன்னைவைக்க என்கண்மணியே காரிகையே
பெண்ணரசே பேதையரே எனக்குக் கருத்தோ தெரியாது 181

பாடையிலே உன்னைவைக்க என்னுயிரே கண்மணியே
பெண்ணரசே எனக்குப் பயனோ தெரியாது 182

பட்சங்க ளுண்டானால் அக்கினியைச் சுற்றி வந்தால்
என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்நாயகியே
எனக்கன்பாய் இடம்தாரும் 183

வந்து நான் அப்போது என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே உனது வலது கைநீட்டு மென்பேனே 184

கைநீட்டித்தந்தல்லோ என்னுயிரேகண்மணியே எனக்
கிணங்கும் நாயகியே நானும் கட்டையிலே சேர்ந்திடுவேன். 185

உத்தமியார் நீரானால் என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே என்னை ஒருமித்துக் கொண்டு செல்லும் 186

வந்து வளைத்தினமே என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே என்னைக் கட்டையிலே வைக்கவென்று 187

என்கையை இறுக்கியல்லோ என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே என்னைக் கட்டுகிறார் இப்பொழுது 188

உன்னைக் கொண்டு நடக்கினமே என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே உனக்குக் கொள்ளிவாய் மூட்டவென்றோ
189

எல்லாச் சடங்குகளும் என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே உனக்குப் பூமுடித்தார்கள் 190

என்னைக் கட்டியிங்கே போட்டினமே என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே உன்னோடு கட்டையிலே சேராமல் 191

கற்புடையாள் நீரானால் என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே என்னுடைய கையில் கட்டுத்தெறியாதோ 192

கலங்கியழும் பொழுது வேலப்பணிக்கருடைக்
கைக்கட்டுத் தெறித்திட்டதே. 193

ஓட்டம் நடையாக வெல்லோ வேலப்பணிக்கர் தன்னுடைய
உத்தமியைக் காணவென்று 194

கண்டு கொண்டேனுந்தனை நான் என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே என்னுடைய கவலையெல்லாம்
தீர்த்தேனே 195

கட்டை அடுக்கியல்லோ என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே உனக்குக் கனத்த நெய் வார்த்தார்கள்
196

என்று சொல்லித் தானுமப்போ வேலப்பணிக்கர் அவர்
ஏங்கிமுகம் வாடி அக்கினியைச் சுற்றிவந்து
என்னுயிரே கண்மணியே எனக் கிணங்கும் நாயகியே
நீரும் அன்பாய்க் கையைத்தாருமென்றார். 197

செத்த பிணந்தானெழும்பி வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
திட்டமாய் கைகொடுத்தாள். 198

செத்துமடிந்தார்கள் வேலப்பணிக்கரும் பெண்சாதியும்
அவைசிவலோகம் சேர்ந்தார்கள். 199

பரமசிவன் பதியில் வேலப்பணிக்கரும் பெண்சாதியும் அவை
பாங்குடனே போய்ச் சேர்ந்தார்கள். 200

முற்றும்.

# ஆனை கட்டிய அரியாத்தை கதை

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பிரிவாகிய முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமுழ முனை என்ற இடத்தை இராசதானியாகக் கொண்டு சின்ன வன்னியன் என்ற மன்னன் வன்னிப் பிரதேசத்தை ஆட்சி செய்துகொண்டிருந்த காலத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் கதை இது.

வன்னிவள நாட்டுப்பாடல்கள் என்ற நூலில் உள்ள வேலப்பணிக்கர் ஒப்பாரி என்ற பாடலில் இக்கதை சொல்லப்பட்டுள்ளது. குமுழமருதன் (குமுழமுனை தெய்வேந்திரம்) இந்நூலில் எழுதியுள்ள “வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தையின் வீர வரலாறு”என்ற கதையையும், இந்நூலிலுள்ள “வேலப்பணிக்கர் ஒப்பாரி” பாடல்களையும் ஆதாரங்களாகக் கொண்டு இக்கதை எழுதப்படுகிறது.

ஒப்பாரியில் இம்மன்னனின் பெயர் சின்ன வன்னியன் என்று குறிப்பிடப் பட்டிருப்பதால் இவன் சிற்றரசனாக, ஒருகுறுநில மன்னனாக இருந்திருக்கலாம். இது உண்மையாயின் பேரரசன் ஒருவன் இருந்திருக்கவேண்டும். ஏனெனில் வன்னியன் அல்லது பெரிய வன்னியன் இல்லாமல் சின்ன வன்னியன் என்ற பெயர் வந்திருக்க முடியாது.

இவனது ஆட்சிக்காலத்தில் ஒருநாள் நாகந்திருக்கோவில் என்ற இடத்தில் மதம்பிடித்த ஒரு கொம்பன் யானை வந்து நிற்கிறது என்ற செய்தியை இவ னுக்குச் சொல்லுகிறார்கள்.

உடனே அவன் ஏழு ஊர்ப் பணிக்கர்களுக்கும் ஓலை எழுதி வரவழைத்தான். அவர்கள் வந்து அரசனை வழிபட்டு நின்றார்கள். அவர்களிடம் அந்த யானையைப் பிடித்துவரும்படி அரசன் கூறினான்.

பணிக்கர்களாகிய ஆனை மறிகாரர்கள் யாவரும் ஆலோசித்து அந்த யானை ஏழுமுழ யானை. கோபமுள்ள யானை.

மழை முகில் போல் பிளிறிக்கொண்டு நிற்கிறது. எங்களால் முடியாது. எங்கள் வேலப்பணிக்கரினால் தான் முடியும் என்று கூறினார்கள்.

அங்கே நின்ற ஒருவன் வேலப்பணிக்கரால் முடியாது. வேலப்பணிக்கரின் மனைவியால்தான் முடியும் என்று கூறினான். அதைக்கேட்ட வேலப்பணிக்கர் விரைவாக வீட்டுக்கு வந்து மிகவும் கவலையோடு இருந்தார்.

அவரது முக வாட்டங்கண்ட அவரது மனைவி அரியாத்தை காரணங்கேட்க அரச சபையில் நடந்ததைக் கூறினார். அரியாத்தை தானேசென்று அந்த மதயானையை அடக்கிக் கட்டிவருவதாகக் கூறிப் புறப்பட்டாள்.

அப்போது அவர், சகுனங்கள் சரியில்லை என்றும் மறுநாள் காலை செல்லும்படியும் கூறினார். அவளும் அதற்குச் சம்மதித்து மறுநாட் காலை எழுந்து வீரபத்திரரைத் தஞ்சம் என நினைத்து புதுப்பானையிலே காளிக்குப் பொங்கலிட்டாள்.

ஏழு சுருள் வெற்றிலையும், ஏழு எலுமிச்சங் காய்களையும் எடுத்தாள். மான்வார்க் கயிற்றை எடுத்து வலது கையால் இழுத்துப் பெலன் பார்த்தாள். தனக்கு அனுமதி தரும்படி கேட்டாள். வேலப்பணிக்கரும் வேறுவழி தெரியாமல் தனது கைத் தடியைக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

ஓட்டமும் நடையுமாகச் சென்று ஒரு நொடிக்குள் வந்துவிடுவேன் என்று சொல்லி விடைபெற்று அரியாத்தை சென்றாள். வழியில் நாக பாம்பு ஒன்று சீறிப் படமெடுத்து வழி மறித்தது. நடுநடுங்கிய அவள் நாகதம்பிரானை நினைத்து வழிபட்டு

“பணிக்கர்மார் எல்லோரும் ஆனைகட்டப் பயந்துவிட்டார். பெண்ணாகிய நான் அந்த ஆனையைக் கட்டப் புறப்பட்டிருக்கிறேன். நான் ஒரு பத்தினியாக இருந்தால் எனக்கு அருள் செய்யவேண்டும்.”என்று சொல்ல நாக பாம்பு புற்றுக்குள் சென்று விட்டது.

அரியாத்தை வெய்யிலில் வெறுங்கால்கள் கொப்பளிக்க ஓடியும் நடந்தும் சென்றாள். அந்தக் கொம்பன் யானை மதம் சிந்தியபடி தும்பிக்கையை மடித்து உயர்த்திக் கத்தியபடி அரியாத்தையின் முன் வந்து நின்றது.

யானையைக் கண்ட அரியாத்தை அஞ்சி நடுங்கி பின் துணிவு வரப் பெற்று காலால் மண்ணை அள்ளி வீரபத்திரரே, வேல் முருகரே நீங்களே துணை என்று நினைத்து வணங்கி, மண்ணை யானையின் முன் போட்டாள்.

"நான் ஒரு கற்புள்ள பெண்ணானால் உன் கையை நீட்டு" என்று அவள் கூற, அந்த மத யானை தும்பிக்கையை நீட்டியது.. உடனே தனது கையினால் அதன் தும்பிக்கையைத் தடவி அன்புகாட்டி அதன் கொம்புகளையும், கண்களையும் பாராட்டி கணவன் கொடுத்த பொல்லை யானையின் முன் போட்டு

"அந்தப் பொல்லை எடுத்து என்கையிலே தா:' என்று சொல்ல யானை தன் தும்பிக்கையால் எடுத்து அரியாத்தையிடம் கொடுத்தது. "உன் காலைத்தா நான் உன்னைக் கட்ட" என்று சொல்ல யானை முன்னங் காலைத் தூக்கி கட்டும்படி பணிந்து நின்றது.

அவள் தான் கொண்டுவந்த மான் வார்க் கயிற்றினால் இறுக்கிக் கட்டி " முன்னங்காலை மடக்கு நான் உன் முதுகில் ஏற "என்று சொல்ல யானை முழங்கால் மடித்துப் பணிய யானையின் கொம்பைப் பிடித்து தோளைப்பிடித்து முதுகில் ஏறிக்கொண்டாள்.

அங்குசத்தைக் காதில் போட்டு " வன்னி மறிகாரர் எல்லோரும், வழி பார்த்து நிற்கின்றார்கள். அவ்விடத்துக்கு விரைந்து செல்லு" என்று சொல்லி யானையைச் செலுத்தினாள்.

யானையின் பிளிறல் சத்தங்கேட்ட சின்ன வன்னியனார் மனைவி செய்தி அறிந்து அரண்மனையின் அந்தப் புரத்தை விட்டுவந்து தனது கணவனுக்கு அரியாத்தை யானையை அடக்கிக்

கட்டி அதில் ஏறிச் சவாரி செய்து வருகின்ற செய்தியைக் கூறினாள்.

"அரியாத்தைக்கு மரியாதை செய்ய வேண்டும். நிலபாவாடை விரித்து, மேலாப்புப் போட்டுப் பந்தல் போட்டுப் பலர் முன்னிலையில் பாராட்டிப் பரிசளிக்க வேண்டும்" என்று வேண்டினாள். அதன்படி எல்லாம் செய்யப்பட்டன.

அரியாத்தை அந்த யானையை ஒரு ஆத்தி மரத்தில் கட்டி வைத்தாள். அதன் பின் சின்னவன்னியனாரின் அழைப்பின் பேரில் சென்று மரியாதை வரிசைகள் எல்லாம் பெற்றாள்.

சின்ன வன்னியனார் மனைவி, கண்டியிலிருந்து கொண்டுவந்த ஒரு கண்ணறைப்பட்டும், தென்னிந்தியக் கேரள நாட்டுத் தொண்டித் துறைமுகத்திலிருந்து வந்து சேர்ந்த தூய வர்ணப் பட்டும், அரியாத்தைக்குக் கொடுத்து ஆபரணங்களையும் போட்டு காற் சிலம்பும் போட்டு விருந்துவைத்து வெள்ளித் தட்டில் வெற்றிலை பாக்கும் கொடுத்தாள். பதினெட்டு வரிசைகளும் மகிழ்ச்சியோடு செய்து வழியனுப்பி வைத்தாள்.

அரியாத்தை வீட்டுக்குப் புறப்பட்டபோது சகுனங்கள் சரியில்லாமல் இருந்தன. ஏதோ ஒரு அச்சம் அவளுக்கு ஏற்பட்டது. தனது கணவன் வேலப் பணிக்கரிடம் "ஆனை கட்டியிருக்கு அதை நீங்கள் அவிழ்த்துக் கொடுங்கள். நான் வீட்டுக்குப் போகிறேன் நீங்கள் விரைவாக வாருங்கள்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குச் சென்றாள்.

வீட்டுக்கு வரும் வழியில் அரியாத்தைக்குத் தலை சுற்றத் தொடங்கிவிட்டது. கண்கள் மங்கத் தொடங்கி விட்டன. கால்கள் சோரத் தொடங்கின. வாய் வறளத் தொடங்கிவிட்டது.. நடக்க முடியாத நிலையில் இடை வழியில் இறந்துவிடுவேனோ என்ற பயத்தோடு ஒருவாறு வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

வெள்ளை விரித்து பொல்லை அதில் கிடத்தி வைத்துவிட்டு படுக்கையில் படுத்தாள். கணவனுக்குச் சொல்லி அனுப்பவும்

யாரும் இல்லாததால் தனிமையில் கணவனை நினைத்துக் கொண்டு படுத்துக் கிடந்தாள்.

அரியாத்தை தனிமையில் கிடந்து புலம்ப வேலப்பணிக்கர் வன்னியனாரது அரண்மனையில் கெட்ட சகுனங்களைக் கண்டு தனக்குக் கண்கள் துடிப்பதாகவும், உடல் நடுங்குவதாகவும் தான் வீட்டுக்குச் செல்லவேண்டு மென்றும் சொல்லி, விடை பெற்று வேகமாக ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

அரியாத்தை துடி துடித்துக் கொண்டு கிடந்து புலம்பினாள். "ஆத்தி மரத்தில் நான் கட்டிவைத்த யானையை அவிழ்த்து விட்டீர்களா. அல்லது யாரையும் அவிழ்க்கச் சொல்லி அனுப்பி விட்டு வந்தீர்களா," எனக் கேட்கிறாள்.

"யானையை அவிழ்க்க வில்லை. எனக்கு உடம்பு படபடப்பாக இருந்தது அதுதான் திரும்பி வருவதாகச் சொல்லி ஓடிவந்தேன். உனக்கு என்ன செய்கிறது." என்று கேட்கிறார். வேலப்பணிக்கர்.

"இன்ன வருத்தமென்று எனக்குச் சொல்லத் தெரிய வில்லை. அந்த யானையை அவிழ்த்துவிட வேண்டும். யானை அப்படியே நின்று இறந்து விட்டால் பெரும் பழி வந்துவிடும், என்னைப் போல் கற்புடையாள் ஒருத்தியால்தான் அந்த யானையைக் கட்டவிழ்த்துவிட முடியும். ஏழு சுருள் வெற்றிலையும் எடுத்துச் சென்று கும்பிட்டு தெண்டனிட்டு அந்தக் கொம்பன் யானை முன் நின்றால் கட்டு அவிழ்க்க காலைக் கொடுக்கும். கட்டை அவிழ்த்தாலும் அது தண்ணீர் குடியாது."என்று பல வாறாகச் சொல்லிப் புலம்புகிறாள்.

"நான் இறப்பது திண்ணம். என்னைப் போல் பல பத்தினிகள் இலங்கையிலே இருக்கிறார்கள். நீங்கள் கவலை மறந்து வாழுங்கள் "என்று சொல்லி வேலப்பணி க்கரின் வலது தொடையிலே சாய்ந்து படுத்துக் கொள்கிறாள். அவளது உயிர் பிரிகிறது.

அவளுக்கு என்ன நடந்தது என்று அறியாமல் வேலப் பணிக்கர் அழுது புலம்புகிறார். யார் தன் மனைவியின் இறப்புக்குக்

காரணம் என்று அறியாதவராய்த் துடி துடித்து அவளுடனே "உடன்கட்டை ஏறுவேன்" என்று சொல்லிப் புலம்புகிறார்.

வேலப்பணிக்கரை ஒரு கட்டையோடு கட்டி வீட்டில் விட்டுவிட்டு அரியாத்தை யின் பிணத்தை சுடலைக்கு எடுத்துச் செல்கிறார்கள்."

கற்புடையாள் நீயானால் உன்னோடு உடன்கட்டை ஏற இந்தக் கட்டு அவிழாதோ"

என்று அவர் புலம்ப அவரது கட்டு தெறிக்கிறது. விரைவாகச் சுடலைக்கு ஓடிச் சென்று சிதையைச் சுற்றிவந்து சிதையின்மேல் ஏறுகிறார்.

சிதையில் எரிந்துகொண்டிருந்த பிணம் எழுந்து கை நீட்டிஅவரது கையைப் பிடித்ததாகவும் அவர் அவளோடு சேர்ந்து எரிந்து இறந்துவிட்டதாகவும் .அவர்கள் இருவரும் சிவலோகம் சென்று சேர்ந்ததாகவும் சொல்லி ஒப்பாரியை முடித்திருக்கிறார் புலவர்.

பெரிய வெளியிலமைந்துள்ள கண்டல் என்னும் இடத்தில் மத யானையைக் கட்டிய நிகழ்ச்சி நடை பெற்றது. இதனால் அந்த இடம் இன்றும் "கொம்பன் படுத்த கண்டல்" என அழைக்கப்படுகிறது. என்கிறார் குமுழ மருதன்.

அந்த யானையை எவரும் அவிழ்த்துவிடாததால் அது அந்த இடத்திலேயே கிடந்து இறந்துவிட்டது என்று சொல்கிறார்கள்.

அகளங்கன்

# அகளங்கன் அவர்கள் எழுதிய நூல்கள்

1) "செல்" "வா" என்று ஆணையிடாய் (அஞ்சலிக் கவிதை-1977)
2) சேரர் வழியில் வீரர் காவியம் (குறுங்காவியம்,-1982)
3) சமவெளி மலைகள் (அகளங்கன்.சு.முரளிதரன் கவிதைகள்-1985)
4) வாலி (ஆய்வு நூல்.மூன்று பதிப்புகள்.1987, 1989, 2006- இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த இலக்கிய நூலுக்கான சான்றிதழ்- 1987)
5) இலக்கியத் தேறல் (கட்டுரைகள்-1988)
6) நளவெண்பா (கதை-1989)
7) அன்றில் பறவைகள் (நாடகங்கள், 1992-தேசிய சாகித்திய மண்டலப் பரிசு- 1992)
8) முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் (வரலாறு-1992)
9) இலக்கியச் சிமிழ் (கட்டுரைகள் - இருபதிப்புக்கள் - 1992, 1993)
10) தென்றலும் தெம்மாங்கும் (கவிதைகள்-1993)
11) பன்னிரு திருமுறை அறிமுகம் (சமயம்-1994)
12) மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் (ஆய்வு-1994)
13) இலக்கிய நாடகங்கள். (நாடகங்கள்,-1994, வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு, கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு-1994)
14) ஆத்தி சூடி (விளக்கவுரை-1995)
15) கொன்றை வேந்தன் (விளக்கவுரை-1996)
16) அகளங்கன் கவிதைகள் (கவிதைகள்-1996, வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு-1996)
17) வாக்குண்டாம் (மூதுரை - விளக்கவுரை-1997)
18) சிவபுராணம் (பொருளுரை-1997)
19) செந்தமிழும் நாப்பழக்கம் (பேச்சுக்கள்- இரு பதிப்புக்கள் 1997, 2015)
20) நாமறிந்த நாவலர் (சிறு குறிப்புக்கள்- இரு பதிப்புக்கள், 1997, 2008.)
21) நல்வழி (பொழிப்புரை -விளக்கவுரை-1998)
22) இசைப்பாமாலை (இசைப் பாடல்கள்-1998)
23) கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு (ஆய்வு-1999)
24) இலக்கியச் சரம் (கட்டுரைகள்- 2000)
25) வெற்றி வேற்கை (நறுந்தொகை - உரை-2000)
26) கூவாத குயில்கள் (நாடகங்கள்-2001)
27) திருவெம்பாவை உரை (சமயம்-2002)

28) பாரதப் போரில் மீறல்கள் (கட்டுரை-2003)
29) சுட்டிக் குருவிகள் (மழலைப் பாடல்கள்-2003)
30) சின்னச் சிட்டுக்கள் (சிறுவர் பாடல்கள்-2005)
31) நறுந் தமிழ் (கட்டுரைகள்-2006)
32) பாரதியாரும் பாஞ்சாலி சபதமும் (ஆய்வு-2007)
33) பத்தினித் தெய்வம்(நாட்டிய நாடகங்கள்-2008-வடமாகாண சாகித்திய மண்டலப் பரிசு 2008)
34) வேரும் விழுதும் (கட்டுரைகள்-2008, வட மாகாண சாகித்திய மண்டலப் பரிசு 2008)
35) கங்கையின் மைந்தன் (நாடகங்கள் - 2009, வட மாகாண சாகித்திய மண்டலப் பரிசு, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு, தமிழியல் விருது, தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ், இலங்கை இலக்கியப்பேரவை விருது-.2009)
36) பந்து அடிப்போம் (சிறுவர் பாடல்கள்-2010)
37) சிரிக்க விடுங்கள் (சிறுவர் பாடல்கள்-2010)
38) சகல கலா வல்லிமாலை-(உரையுடன்-2011)
39) அலைக்குமிழ் (நாவல்-2011,கொடகே தேசிய சாகித்திய சான்றிதழ். இலங்கை இலக்கியப் பேரவையின் சான்றிதழ். தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ். தமிழியல் விருது-2011)
40) சின்னஞ் சிறிய சிறகுகள். (குழந்தைப் பாடல்-2012, தேசிய சாகித்ய மண்டலப் பரிசு, வடமாகாண சிறந்த சிறுவர் இலக்கியப் பரிசு, தமிழியல் விருது.-2012.)
41) கம்பனில் நான். (கட்டுரைகள். 2013.)
42) முற்றத்துக் கரடி (சிறுகதைகள்-2014- தமிழ்நாடு திருப்பூர்,கவிஞர் சுகந்தி சுப்பிரமணியம் நினைவுப் பரிசு- 2014)
43) தமிழ்த் தூது. வண. பிதா. தனிநாயகம் அடிகளார். (சிறு குறிப்புக்கள் -2014)
44) வன்னிப் பிரதேச வயற் பண்பாடு.( ஆய்வு- 2014, வடமாகாண சிறந்த நூற்பரிசு,தமிழியல் விருது-2014, கொழும்புக் கம்பன் கழகம் நுழைபுலம் ஆய்வுவிருது - 2017)
45) ஞானப்பழம் (பாநாடகம்)
46) ஆனைகட்டிய அரியாத்தை (நாடகம்)

# தமிழ் வாழ்த்து

இசைத்திட இனிதாகும் எங்கள் பெருமை - தமிழ்
இன்பமோ சொல்லினிலே சொல்லல் அருமை
திசைதோறும் எங்கள்மொழி செய்யும் புதுமை - இது
தேவர்க்கும் கடவுளர்க்கும் என்றும் இனிமை.

(இசைத்.... )

பக்தியின் மொழி தமிழாம்
பரவசந் தரும் புதிராம்
நித்தியம் வளம் பெருகும்
நிகரிலா மொழி தமிழாம்.

கம்பனும் வள்ளு வரும்
கவிஇளங் கோவுந் தந்த
செம்மை மிகு கவிதை
சிந்தை தனை நிறைக்கும். (இசைத்.....)

ஔவையின் அறி வுரைகள்
அருண கிரிப் புகழ்கள்
செவ்வை மிகு தமிழில்
சேக்கிழார் தரும் கவிகள்

மூவர் தமிழ் அமுதும்
முடி மன்னர் ஆதரவும்
தேவர் களும் பருகும்
திருவா சகப் பொலிவும் (இசைத்....)

நல்லூர் நா வலரும்
நல்ல விபு லானந்தரும்
பல்லோர் புகழ்ந் தேத்தும்
பாரதி வள்ள லாரும்

குமர குரு பரரும்
குரு தாயு மானவரும்
உமறுப் புல வரொடு
உயர் வீர மாமுனிவர். (இசைத்....)

அகளங்கன்



அகளங்கன்

பழந்தமிழ் இலக்கியங்களையும், இடைக்காலக் காவியங்களையும் ஆழ்ந்து கற்று அவற்றை இரசித்து இரசித்துச் சொல்லக்கூடிய ஒருவர்தான் கவிஞர் தமிழ்மணி அகளங்கன்.

இலக்கிய இரசனை இவரது பாரம்பரியச் சொத்து. கவிதை, நாடகம், இசைப்பாடல், இலக்கியத்திறனாய்வு, புனை கதை முதலான பல்வேறு துறைகளில் தனது முத்திரையை ஆழமாகப் பதித்துவரும் இவர் தொழிலால் கணித ஆசிரியர்.

சாகித்திய இரத்தினா

**கலாநிதி முல்லைமணி**

ISBN : 978-955-7654-14-0

9 789557 654140

விலை : 100/-